# அனுபவ வைத்தியம் கைமுறை



இந்திய மருத்துவம் - ஓமியோபதித்துறை
சென்னை - 600 106.

தமிழ் மருத்துவ நூல் வரிசை – 19

# அனுபவ வைத்தியம் – கைமுறை

(ஓலைச்சுவடியினின்று பதிப்பிக்கப்பட்ட நூல்)

Specimen copy

வெளியீடு
சித்த மருத்துவ நூல் வெளியீட்டுப் பிரிவு
இந்திய மருத்துவம் – ஓமியோபதித் துறை
சென்னை – 600 106
–2012–

# பதிப்புத் தகவல்


| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | அனுபவ வைத்தியம் – கைமுறை (தமிழ் மருத்துவ நூல்வரிசை 19) |
| பதிப்பு | : | சித்தமருத்துவ நூல் வெளியீட்டுப் பிரிவு இந்திய மருத்துவம்–ஓமியோபதித் துறை சென்னை – 106 |
| பதிப்புரிமை | : | தமிழ் நாட்டரசு |
| பொருள் | : | சித்தமருத்துவ முறைகள் |
| பதிப்பாண்டு | : | முதற்பதிப்பு, 2010 |
| படிகள் | : | 1000 |
| பக்கங்கள் | : | 112 |
| அச்சுத்தாள் | : | 60 GSM மேப்லித்தோ |
| தாள் அளவு | : | 1 × 8 டெம்மி |
| அச்சுப்புள்ளி | : | 11 புள்ளி |
| விலை | : | |
| கட்டமைப்பு | : | சாதாரண அட்டைக்கட்டு |
| ஒளி அச்சு | : | சென்னை மைக்ரோ பிரின்ட் / 2374 0099 |
| அச்சிட்டோர் | : | சென்னை மைக்ரோ பிரின்ட் பிரைவேட் லிட்., நெல்சன் மாணிக்கம் சாலை, அமைந்தகரை, சென்னை – 29. |

## இந்திய மருத்துவம் – ஓமியோபதித் துறை
## சென்னை – 600 106.

### சித்த மருத்துவ நூல் வெளியீட்டுப் பிரிவு

### நூலாக்கப் பணிக்குழு

ஆய்வு மருத்துவ அலுவலர்
**மரு. ச. கௌரி,** பி.ஐ.எம்.,

பதிப்பாசிரியர்கள்
திரு.த.அழகப்பராசு, M.A.,M.A., M.L.I.S., M.phil., B.Ed.
சிறப்பு அலுவலர் – மொழிபெயர்ப்பு (பொ)

திருமதி.செ.இரா.பிரசன்னா, M.A., M.phil., B.Ed.
தமிழ்ப்புலவர்

### சுவடி நகலெடுப்போர்

திரு.தி.சுபாஷ் சந்திரபோஸ்
திரு.வெ.சாரங்கபாணி
திருமதி.த.லெட்சுமி
திருமதி.நா.பாக்கியசுந்தரி, B.A..

# பதிப்புரை

மக்களின் கவனத்தை ஈர்த்துக் கொண்டிருக்கிற சித்த மருத்துவத்தினை வெளிக்கொணரும் வகையில், தமிழ் மருத்துவ நூல் வரிசையில், பத்தொன்பதாவது நூலாக வெளிவருகிறது இந்நூல்.

நாம் பதிப்பிக்க எடுத்துக் கொண்ட இந்த ஓலைச்சுவடியில் சிலவிடங்களில் கூறப்பட்ட கருத்துகள் மீண்டும் வந்தன. செய்திகள் முறை மாறிக் கிடந்தன. இவற்றை ஒழுங்கு படுத்தினோம். சுவடியில் எழுதப்பட்டிருந்த நடையும் பதிப்பிக்கும் அளவு சிறந்ததாக இல்லை. எனவே அவற்றை முறைப்படுத்தி

1. தேவையான பொருட்கள்,
2. செய்முறை
3. உண்ணும் அளவு
4. துணை மருந்து
5. தீரும் நோய்
6. பத்தியம்

எனத் தலைப்புகளிட்டு வெளியிட்டுள்ளோம்.

இத்தலைப்புகளை எல்லாப் பக்கங்களிலும் அச்சிடாமல் அவற்றின் சுருக்கமாக தே. பொ., செ.மு., அளவு, து.ம. தீ.நோ, பத்தியம் என பதிப்பித்துள்ளோம்.

கற்போரின் எளிமை கருதி பத்தி பத்தியாக எழுதுவதைத் தவிர்த்து படித்ததும் பிடித்துக் கொள்ளும் அளவிற்குத் தலைப்பிட்டு சிறுகச் சிறுகக் கொடுத்துள்ளோம்.

ஓலைச் சுவடிகளிலிருந்து முதன்முதலில் தாளில் அச்சேறும் போது எல்லாச் செய்திகளும் முழுமை பெற்றுவிட்டதாகக் கருத முடியாது. அவ்வகையில் இந்நூலைக் கண்ணுறுவோர் தரும் முறையான திருத்தங்கள் ஏற்கப்பட்டு இனிவரும் பதிப்புகளில் பதிவு செய்யப்படும்.

பதிப்பாசிரியர்கள்

# பொருளடக்கம்


| வ.எண் | விவரங்கள் | ப.எண் |
|---|---|---|
| **அ. உள்மருந்து** | | |
| 1. | சாறு வகைகள் | 01 |
| 2. | குடிநீர் வகைகள் | 03 |
| 3. | கற்க வகைகள் | 13 |
| 4. | உட்களி வகைகள் | 22 |
| 5. | அடை வகைகள் | 23 |
| 6. | சூரண வகைகள் | 24 |
| 7. | பிட்டு வகைகள் | 34 |
| 8. | மணப்பாகு | 35 |
| 9. | நெய் வகைகள் | 36 |
| 10. | இளக வகைகள் | 39 |
| 11. | எண்ணெய் வகைகள் | 44 |
| 12. | மாத்திரை வகைகள் | 59 |
| 13. | மெழுகு வகைகள் | 71 |
| 14. | குழம்பு | 72 |
| 15. | செந்தூர வகைகள் | 73 |
| 16. | பற்ப வகைகள் | 75 |
| 17. | மருந்து வகைகள் | 78 |
| **ஆ. வெளி மருந்து** | | |
| 1. | கட்டு வகைகள் | 96 |
| 2. | பற்று வகைகள் | 98 |
| 3. | பூச்சு வகைகள் | 100 |
| 4. | கலிக்கம் | 104 |
| 5. | களிம்பு | 104 |

# அனுபவ வைத்தியம் – கைமுறை

## உள்மருந்து

# 1. சாறு வகைகள்

### சாறு – 1

தேவையான பொருட்கள் : காட்டுக் குறிஞ்சா இலை வேண்டிய அளவு.

செய்முறை : காட்டுக் குறிஞ்சா இலையைத் துவைத்துச் சாறாக்கிப் பருக வேண்டும்.

அளவு : 170 மி.லி.

தீரும் நோய் : சிலந்திக் கடி

### சாறு – 2

தே.பொ : திருநீற்றுப் பச்சிலை தேவையான அளவு

செ.மு : அதிகாலையில் திருநீற்றுப் பச்சிலையை வாயில் போட்டு மென்று தின்னவும். சாறெடுத்தும் பருகலாம்

அளவு : வாய்கொண்ட அளவு, காலையில், ஐந்து அல்லது ஏழு நாட்கள்

தீ.நோ : வாய்வேக்காடு

### சாறு – 3

தே.பொ : முள்ளங்கிக் கிழங்கு வேண்டிய அளவு

செ.மு : முள்ளங்கிக் கிழங்கை இடித்துச் சாறு பிழிந்து வெள்ளைச் சர்க்கரை கலந்து சாப்பிடவும்.

அளவு : தேவையான அளவு

தீ.நோ : நீர்ச்சுருக்கு

## சாறு – 4

தே.பொ : புளியிலை, தேவையான அளவு
நற்சீரகம் – 4 கி

செ.மு : புளியிலையைத் துவைத்து நீராகாரத்தில் ஊற வைத்துக் கொள்ளவும், அதில் சீரகத்தை அரைத்துக் கலக்கிக் குடிக்கவும்.

அளவு : 16 மி.லி – 30 மி.லி.

தீ.நோ : சூலைக்கடுப்பு, உஷ்ணவாய்வுக் கடுப்பு.

## சாறு – 5

தே.பொ : முற்றிய மாவிலிங்கப்பட்டை, சுண்ணாம்புச்சல்லி 2.2 கிராம்

செ.மு : மாவிலிங்கப்பட்டையை இடித்து மோர் கூட்டிச் சாறெடுத்துக் கொள்ளவும். இவற்றுடன் சல்லிச்சுண்ணாம்பினைக் கரைத்துக் கொள்ளவும்.

அளவு : 675 மி.லி மூன்று வேளை

தீ.நோ : சீழ்ப்பிரமியம், இரத்த பிரமியம்

பத்தியம் : ஆறு நாட்கள்

## சாறு – 6

தே.பொ : சட்டி இடிச்சான் கிழங்கு

செ.மு : சட்டி இடிச்சான் கிழங்கை வென்னீரில் துவைத்துச் சாறெடுத்துக் குடிக்கவும்.

அளவு : தேவையான அளவு

தீ.நோ : குடல் படுவன்.

# 2. குடிநீர் வகைகள்

## குடிநீர் – 1

தே.பொ : கொத்துமல்லி, சுக்கு, விலாமிச்சை வேர்

செ.மு : இம்மூன்றையும் சேர்த்துக் குடிநீராய்க் காய்ச்சிக் கொடுக்கவும்.

அளவு : நோயின் வன்மை அறிந்து கொடுக்கவும்.

தீ.நோ : சளி

## குடிநீர் – 2

தே.பொ : வடக்கே போகிற ஆவிரைவேர், பசும் கொய்யா இலை, பட்டை, கடுக்காய்ப் பட்டை

செ.மு : இம்மருந்துகள் மூன்றையும் அவித்துக் குடிநீர் செய்து கொள்ளவும்.

அளவு : தேவையான அளவு, மூன்று நாட்கள்

தீ.நோ : இரத்த மூலம்

பத்தியம் : கரப்பான் பண்டம் தவிர்க்கவும்.

குறிப்பு : *மேற்கூறிய பொருட்களை இடித்துக் காய்ச்சிக் குடிநீராக்கிக் கொள்ளவும்.*

## குடிநீர் – 3

தே.பொ : வடக்கே செல்லும் அழிஞ்சில் வேர், மோர்.

செ.மு : வடக்கே செல்லும் அழிஞ்சில் வேரை எடுத்து மேற்றோல் சீவி மோரில் அரைத்துக் கொள்ளவும்.

அளவு : தேவையான அளவு

தீ.நோ : அதிசார சுரம், மூலக்கடுப்பு

பத்தியம் : வெள்ளாட்டு உப்புக்கண்டம், வெள்ளெலி ஆகும்.

## குடிநீர் – 4

தே.பொ : வாழைக்கிழங்கு, நற்சீரகம், பசுவின் பால், சர்க்கரை

செ.மு : வாழைக் கிழங்கைக் குடைந்து நற்சீரகத்தை வைத்து மறுநாள் ஊறிய நற்சீரகத்தைப் பசுவின் பாலில் அரைத்து அந்தப் பாலில் சர்க்கரை கலந்து குடிநீராக்கிக் கொள்ளவும்.

அளவு : தேவையான அளவு

தீ.நோ : மேலெரிவு, வறட்சி, உள்காய்ச்சல்

குறிப்பு : *குடிநீராகக் காய்ச்சாமல் அப்படியே குடிநீராய் உட்கொள்ள வேண்டும்.*

## குடிநீர் – 5

தே.பொ : பாசிப்பயிறு, கற்றாழை, பசுவின்பால், சர்க்கரை

செ.மு : பாசிப்பயிறைக் கற்றாழை போலே கட்டி மறுநாள் எடுத்துப் பசுவின் பாலிலே அரைத்துச் சர்க்கரை கலந்து குடிநீராக்கிக் கொள்ளவும்.

அளவு : தேவையான அளவு, சுரம் தீருமட்டும்

தீ.நோ : மேலெரிவு, வறட்சி, உள்காய்ச்சல்

குறிப்பு : *குடிநீராகக் காய்ச்சாமல் அப்படியே குடிநீராய் உட்கொள்ள வேண்டும்.*

## குடிநீர் – 6

தே.பொ : நற்சீரகம் – 175 கி, கற்றாழை, பசும்பால், இளநீர், சர்க்கரை

செ.மு : கற்றாழையைப் பிளந்து நற்சீரகத்தை அதனுள்

வைத்துக் கட்டி மறுநாள் பசுவின் பாலில் அரைத்து இளநீர் விட்டு சர்க்கரை போட்டுக் குடிநீராக்கிக் கொள்ளவும்.

அளவு : மூன்று நாட்கள்

தீ.நோ : உடல் தெளிவுறும்; உள்காய்ச்சல் தீரும்.

குறிப்பு : *குடிநீராகக் காய்ச்சாமல் அப்படியே குடிநீராய் உட்கொள்ள வேண்டும்.*

## குடிநீர் – 7

தே.பொ : நாகப்பட்டை – 125 கி, அத்திப்பட்டை – 125 கி மாம்பட்டை – 125 கி

செ.மு : மேற்கூறிய பட்டைகளைப் பஞ்சு போல் இடிக்கவும். பின் 1.3லி தண்ணீர் விட்டு எரித்து 350 மி. லிட்டராக வற்றக் காய்ச்சிக் கொள்ளவும்.

அளவு : நோயின் வன்மை, நோயாளியின் தன்மை அறிந்து ஐந்து நாட்கள் சாப்பிடவும்.

தீ.நோ : இரத்த பேதி

## குடிநீர் – 8

தே.பொ : மஞ்சள்தூள், புகையிலை, வெற்றிலை

செ.மு : சட்டியைக் காய வைத்து அதில் மஞ்சள் தூளைப் போட்டு, புகையிலையின் தண்ணீரை விட்டு வெற்றிலையில் சுண்ணாம்பு தடவி அதையும் போட்டு வேக விடவும். சிவந்த குடிநீராய் இருக்கும்.

அளவு : 325 மி.லி.

தீ.நோ : குடல்படுவன், சலக்கழிச்சல்

## குடிநீர் –9

தே.பொ : கருவேப்பிலை, நாவல் ஈர்க்கள், ஒதியம் ஈர்க்கள், ஆவரை ஈர்க்குகள்.

செ.மு : மேற்குறிப்பிட்ட பொருட்களைக் கலந்து காய்ச்சிக் குடிநீராக்கிக் கொடுக்கவும்.

அளவு : நோயின் வன்மை அறிந்து நோய் தீரும் வரை உண்ணவும்.

தீ.நோ : அதிசார சுரம்

## குடிநீர் – 10

தே.பொ : ஆவாரை வேர், மாம்பழம், கொன்றைப் பட்டை, மருதம்பட்டை, நாவல்பட்டை, அதிவிடையம்

செ.மு : ஆவாரை வேர், மாம்பழம், கொன்றைப் பட்டை, மருதம்பட்டை, நாவல்பட்டை இவை ஐந்தையும் இடித்துக் குடிநீராக்கி அதிவிடையம் போட்டுக் கலக்கிக் கொடுக்கவும்.

அளவு : தேவையான அளவு

தீ.நோ : நீரிழிவு

பத்தியம் : புளி, புகையிலை, கத்தரிக்காய், கருவாடு ஆகாது.

## குடிநீர் –11

தே.பொ : சிறு தேக்கு, சீந்தில்கொடி, நிலவேம்பு, பற்பாடகம், ஆவாரை வேர், கோஷ்டம், திப்பிலி, சுக்கு, இவை வகைக்குச் சரி எடை.

செ.மு : 1.3 லி. தண்ணீர் விட்டு அதில் மேற்கூறிய பொருட்களைப் போட்டு எட்டில் ஒன்றாகக் காய்ச்சி (165 லி) வற்றியபின் குடிநீரை வடித்துக் கொள்ளவும்.

அளவு : நோயின் வன்மை, நோயாளியின் தன்மை அறிந்து 5 அல்லது 6 வேளை கொடுக்கவும்.

தீ.நோ : விடாச்சுரம்

து. ம : தேன்

## குடிநீர் –12

தே.பொ : செவ்வியம், சித்திரமூலம், சுக்கு, திப்பிலி, நாயுருவி வேர், விதை, முருங்கைப்பட்டை இவை வகைக்குச் சம அளவு.

செ.மு : மேற்கூறிய பொருட்களைப் பொடி செய்து குடிநீராக்கிக் கொள்ளவும்.

அளவு : தேவையான அளவு

தீ.நோ : மண்டைப்பீனசம்

## குடிநீர் –13

தே.பொ : கண்டங்கத்திரி, முள்ளிக்காய், நொச்சி வேர், சுக்கு, நாயுருவி வேர், விதை, திப்பிலி, இவை வகைக்கு 4.4 கி.

செ.மு : மேற்கூறிய பொருட்களைப் பொடி செய்து குடிநீராக்கிக் கொள்ளவும்.

தீ.நோ : மண்டைப்பீனசம்

## குடிநீர் –14

தே.பொ : மாங்கொட்டை, நாவல்கொழுந்து, புளியாரை, வனத் துருக்கி எனும் கடுக்காய், மாவிலை, கருவாழைப் பிஞ்சு வகைக்குச் சம அளவு.

செ.மு : மேலே கூறப்பட்ட சரக்குகளைத் தண்ணீரில் போட்டுக் கொதிக்கக் காய்ச்சிக் குடிநீராக்கிக் கொள்ளவும்.

அளவு : தேவைக்கேற்ப

தீ.நோ : அதிசாரம், சுரம், சன்னி

## குடிநீர் –15

தே.பொ : கருவாழைப்பிஞ்சு, கோரைக்கிழங்கு, விடதாரைக் கொழுந்து, தென்னம்பாளை, பெருமரத் தோல், இலவம்பிசின், அதிவிடையம் சம அளவு, மாதுளம் பிஞ்சு வகைக்குச் சமஅளவு

செ.மு : மேற்கூறிய சரக்குகளை 2.6 லி தண்ணீர் விட்டு எட்டொன்றாக்கிக் கொள்ள வேண்டும். இலவம்பிசின், அதிவிடையம் இவ் விரண்டையும் 2.6 லி தண்ணீர் விட்டு 336 மி. லிட்டராகுமாறு குறுக்கிக் காய்ச்சிக் குடிநீராக்கிக் கொள்ள வேண்டும்.

அளவு : தேவைக்கேற்ப

தீ.நோ : அதிசார சுரம்

## குடிநீர் –16

தே.பொ : மாதுளைப் பிஞ்சு, அதிவிடையம் கோரைக் கிழங்கு, பெருமரத்தோல், சுக்கு, விளாங்காய் சதைப்பகுதி, கருவேலம்பட்டை அனைத்தும் சம எடை.

செ.மு : மேலே கூறப்பட்ட சரக்குகளில் 2.6 தண்ணீர் விட்டு குடிநீராக்கி இறக்கிக் கொள்ள வேண்டும்.

அளவு : நோயின் தன்மை, நோயாளியின் வன்மைக்கேற்ப.

தீ.நோ : அதிசார சுரம்

## குடிநீர் –17

தே.பொ : ஆவாரைச் சமூலம், கொன்றைப்பூ, கருவேலம்பட்டை, அத்திப்பட்டை, மருதம்பட்டை, சுண்டி, ஒதியம் ஈர்க்குகள், வறட்பூலா, ஆரை ஈர்க்கு, பனை ஈர்க்கு,

சுக்கு, கற்கடகசிங்கி, தான்றிக்காய் வகைக்குச் சம எடை.

செ.மு : மேற்கூறிய சரக்குகளைப் பொன்னிறமாய் வறுத்துக் கொள்ள வேண்டும். சுக்கைச் சூடாக்கிக் கொள்ள வேண்டும். கற்கடகசிங்கி, தான்றிக்காய் அரைத்து 3.9 லி. தண்ணீர் விட்டு 1.3 லிட்டராகுமாறு வற்றக் காய்ச்சி இவற்றுடன் முன்பு வறுத்துள்ள சரக்கு களைச் சேர்த்து அரைத்தெடுத்துக் கொள்ள வேண்டும்.

அளவு : தேவைக்கேற்ப

தீ.நோ : அதிசாரம்

## குடிநீர் – 18

தே.பொ : தைவேளை, கோரைக்கிழங்கு, வசம்பு – கையளவு, வேப்பெண்ணெய் – 672 மி.லி

செ.மு : மேற்சொன்ன மூன்று சரக்குகளையும் நறுக்கி 672 – மி.லி. வேப்பெண்ணெயில் வதக்கித் தேவையான அளவு தண்ணீர் சேர்த்து ஐந்து கொதி வரும்வரை காய்ச்சிக் கொள்ள வேண்டும்.

அளவு : 25 மி.கி. அளவு நக்கிச் சாப்பிடவும்.

தீ.நோ : வயிறு கழியும்

## குடிநீர் –19

தே.பொ : சிறுகீரை வேர், கண்ணுப்பீளைவேர், நெருஞ்சிவேர்

செ.மு : மேற்கூறிய இம்மூன்றின் சமூலமும் காய வைத்து 2.6 லி தண்ணீர் விட்டு 1.3 லிட்டராக வற்றக் காய்ச்சி இறுத்துக் கொள்ள வேண்டும். இவற்றுடன் வெண்காரம் 2கி. பொரித்துக் கலக்கிக் கொடுக்கவும்.

அளவு : தேவைக்கேற்ப

தீ.நோ : நீரடைப்பு

## குடிநீர் –20

தே.பொ : முக்காவேளை வேர், வெள்ளருகு வேர், சங்கம்வேர் சம எடை, சுக்கு, திப்பிலி, ஓமம், கடுகுரோகணி, பெருங்காயம், சித்தரத்தை, வெள்ளுள்ளி, மிளகு, சிறுநாகப்பூ, இந்துப்பு, பொட்டிலுப்பு, வளையலுப்பு, கல்லுப்பு, ஏலம், வெல்லம், வாய்விளங்கம், கொடிவேலி வேர் சம அளவு.

செ.மு : மேற்குறிப்பிட்ட மூன்று மூலிகை சரக்குகளைச் சிறு துண்டுகளாக நறுக்கித் தண்ணீரில் போட்டு நான்கில் ஒரு பங்காகக் குறுக்கிக் காய்ச்சிக் கொள்ள வேண்டும். சுக்கு முதல் கொடிவேலி வேர் முடியவுள்ள சரக்குகளை அரைத்து மேற் சொல்லப் பட்ட குடிநீரில் போட்டு இலேகியமாக்கி இறக்கிக் கொள்ள வேண்டும்.

அளவு : நோய்க்குத் தக்கவாறும் நோயாளியின் வன்மைக் கேற்பவும் கொடுக்கவும்.

தீ.நோ : வாய்வு, வாந்தி, குன்மம், திரட்சி, கெண்டை, வயிற்றில் உண்டான வியாதி.

## குடிநீர் – 21

தே.பொ : வெள்ளை வெங்காயம், முருங்கைப்பட்டை, சுக்கு, கருங்கொள் – வகைக்கு 13 கி.

செ.மு : மேற்கூறப்பட்ட சரக்குகளை 1.3 லி நீரில் விட்டு 20 மி.லி அளவாக வற்றக் காய்ச்சி வைத்துக் கொள்ளவும்.

அளவு : 20 மி.லி., ஆறு வேளை

தீ.நோ : வாய்வு

## குடிநீர் – 22

தே.பொ : புரசம் விரை, மிளகு, வெள்ளைப்பூண்டு, – வகைக்கு 12 கி.

செ.மு : மேற்கூறியவற்றை அரைத்து வைத்துக் கொள்ளவும்.

அளவு : 2.2 கி. மூன்று நாட்கள் காலை

தீ.நோ : வாய்வு

பத்தியம் : புளி, புகையிலை தள்ளவும்.

## குடிநீர் –23

தே.பொ : சீந்தில் கொடி – தேவையான அளவு, கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய் – வகைக்குச் சம எடை

செ.மு : மேற்குறிப்பிட்ட மூன்றுடன் சீந்தில் கொடி சேர்த்து இடித்துத் தூளாக்கவும். தூளை 5.2லி. தண்ணீரி லிட்டு 1.3 லி. ஆக வற்றக் காய்ச்சிக் கொள்ளவும்.

அளவு : வேளைக்கு 40 மி.லி. மூன்று வேளை

தீ.நோ : உடல் சூடு

பத்தியம் : பத்தியமாய் இருக்கவும்.

## குடிநீர் – 24

தே.பொ : நாகிராஞ்சி – ஒரு கட்டு, தண்ணீர் – 1.9 லி வெண்காரம் – 4 கி

செ.மு : நாகிராஞ்சி கட்டைச் சுட்டு சாம்பலை எடுத்து 2 லி தண்ணீரில் கரைத்துத் தெளிய வைத்து வடித்துக் கொள்ளவும். வெண்காரத்தைப் பொரித்துக் குடிநீரில் கலக்கிக் கொடுக்கவும்.

அளவு : 16 – 30 மி,லி, இருவேளை.

தீ.நோ : நீரடைப்பு

## குடிநீர் – 25

தே.பொ : விஷ்ணுகிரந்தி இலை, முசுமுசுக்கை, சங்கன் இலை, சிவனார் வேம்பிலை, பிரமியிலை, சுக்கு, சீரகம், தேன் – வகைக்கு 4 கி

செ.மு : மேற்குறிப்பிட்ட இலைகளை இடித்துப் பிட்டவியல் செய்து குடிநீராய் இறக்கவும். அதில் சுக்கு, சீரகம் இரண்டையும் இளவறுவலாய் வறுத்துப் பொடித்துப் போடவும். தேன் விட்டுக் கலக்கவும்.

அளவு : 16 – 30 மி.லி. மூன்று வேளை

தீ.நோ : நான்காம் மாறல் சுரம்

பத்தியம் : புளி, புகையிலை ஆகாது.

## குடிநீர் – 26

தே.பொ : வறக்கொட்டி இலை வேண்டிய அளவு.

செ.மு : வறக்கொட்டியிலையை இடித்துப் பிட்டவியலாக்கிக் குடிநீராய் பிழிந்தெடுத்துக் கொள்ளவும்.

அளவு : 16 – 30 மி.லி.

தீ.நோ : நீர் ஒழுகல்

## குடிநீர் – 27

தே.பொ : சேவல் 1, சவ்வாது – 2 கி, குங்குமப்பூ – 1 கி

செ.மு : சேவலைச் சுத்தப்படுத்திக் குடிநீராகச் (Soup) செய்து கொள்ளவும். அதில் சவ்வாதினையும், குங்குமப் பூவையும் பொடித்துப் போடவும்.

அளவு : அளவறிந்து கொடுக்கவும்.

தீ.நோ : சுகப்பிரசவம் ஏற்படும், வயிற்றில் குழந்தை இறந்திருப்பின் பிண்டம் வெளிப்படும்.

❖❖❖❖❖

# 3. கற்க வகைகள்

## கற்கம் – 1

தே.பொ : மாவிலிங்கப் பட்டை, உள்ளி, மிளகு – சம எடை.

செ.மு : இவற்றை அரைத்து வழித்து வைத்துக் கொள்ளவும்.

அளவு : கொட்டைப்பாக்களவு (2.2 கி) மூன்று நாட்கள்

தீ.நோ : மாதவிடாய் உண்டாகும்.

## கற்கம் – 2

தே.பொ : அரசங் கொழுந்து, பசுவின் பால்–தேவையான அளவு.

செ.மு : அரசமரத்திலிருந்து கொழுந்து இலைகளாகக் கொண்டு வந்து அதில் பசுமாட்டுப்பால் விட்டு அரைக்கவும்.

அளவு : கழற்சிக்காய் அளவு

தீ.நோ : குழந்தைப்பேறு உண்டாகும்.

## கற்கம் – 3

தே.பொ : அவுரி வேர் – தேவையான அளவு

செ.மு : அவுரி வேரை அரைத்துப் பசுவின் பாலிலே கொடுக்கவும்.

அளவு : எலுமிச்சங்காய் அளவு

தீ.நோ : வெறி, பித்தம்

பத்தியம் : முருங்கை இலை, எருமை மோர் சாதம் சாப்பிடவும். ஈர வெங்காயத்தைத், துவைத்துத் தலையில் கட்டவும்.

குறிப்பு : *கையாந்தகரைச் சாற்றைத் தலையில் தேய்த்து இருபது குடம் தண்ணீர் விடவும்.*

## கற்கம் – 4

தே.பொ : இலந்தைக் கொழுந்து

செ.மு : இலந்தைக் கொழுந்தை அரைத்து உட்கொண்டு வெந்நீர் அருந்தவும்.

அளவு : தேவையான அளவு

தீ.நோ : குடல் படுவன்.

## கற்கம் – 5

தே.பொ : பசுவெண்ணெய், கற்றாழைச் சோறு, பசளைக் கிழங்கு

செ.மு : பசுவின் வெண்ணை, கற்றாழைச் சோறு, பசளைக் கிழங்கு இவற்றை அரைத்துக் கொள்ளவும்.

அளவு : தொப்புளில் தடவவும். உள்ளுக்கும் கொடுக்கவும்.

தீ.நோ : குடல் படுவன்.

## கற்கம் – 6

தே.பொ : கீழ்க்காய் நெல்லி, பசுவின் வெண்ணை.

செ.மு : கீழ்க்காய் நெல்லியை வாய் பேசாமல் பிடுங்கி, அரைத்துக் கொள்ளவும்.

அளவு : தேவையான அளவு

து.ம. : பசுவின் வெண்ணை

தீ.நோ : பிரமேகம்

## கற்கம் – 7

தே.பொ : வடக்கே போகிற அழிஞ்சில் வேர், பசுவின் பால்

செ.மு : அழிஞ்சில் வேரை அரைத்துப் பசுவின் பாலில் குழப்பிக் கொடுக்கவும். பேதியாகும்.

தீ.நோ : மருந்து முறிதல், மருந்து விழுதல்

பத்தியம் : பெட்டைக் கோழி சமைத்துக் கொடுக்க வேண்டும்.

குறிப்பு : *பேதி அடிக்கடி ஆகுமாறு பார்த்துக் கொள்ளவும். மருந்து விழும், மருந்து விழுந்துவிட்டால் பச்சைத் தண்ணீரில் முழுகவும்.*

## கற்கம் – 8

தே.பொ : தேவதாட்சிப் பழம், மிளகு – சரி எடை

செ.மு : மேற்கூறிய பொருட்களைச் சேர்த்து அரைத்துக் கொள்ளவும்.

அளவு : நோயின் வன்மை அறிந்து சாப்பிடவும்.

தீ.நோ : கல்லடைப்பு, நீரொழுக்கு

## கற்கம் – 9

தே.பொ : தவசி முருங்கையிலை

செ.மு : தவசி முருங்கையிலையை அரைத்து வைத்துக் கொள்ள வேண்டும்.

அளவு : புண் ஆறும் வரை காலை, மாலை இருவேளை.

தீ.நோ : புண்

குறிப்பு: *எருக்கம்பாலைப் புண் வாயில் ஊற்ற ஆறும்.*

## கற்கம் – 10

தே.பொ : தென்னங் கொழுந்து அரிசி – ஒரு பிடி

செ.மு : தென்னம்பாளையை இளசாகக் கொண்டு வந்து அதனுள் இருக்கும் கொழுந்து அரிசியை எடுத்துக் கொள்ளவேண்டும். அதனுடன் பசும்பால் சேர்த்து அரைத்துக் கொள்ள வேண்டும்.

அளவு : எலுமிச்சங்காய் அளவு, காலை, மாலை இரு வேளை வீதம் நாற்பது நாட்கள் சாப்பிடவும்.

தீ.நோ : தாதுவிருத்தி.

பத்தியம் : இச்சாபத்தியம்

குறிப்பு : *இரவில் சாப்பிட்ட உடன் பால் குடிக்கவும்.*

## கற்கம் – 11

தே.பொ : நெல்லிப்பட்டை, நற்சீரகம், எலுமிச்சம் பழச்சாறு – தேவையான அளவு.

செ.மு : மேற்கூறிய சரக்குகளை எலுமிச்சம் பழச்சாறு விட்டு நன்றாய் அரைத்துக் கொள்ளவும்.

அளவு : மூன்று நாட்கள்

து. ம : எருமைத் தயிர்

தீ.நோ : வயிற்றுக் கடுப்பு

## கற்கம் – 12

தே.பொ : ஆலம் விழுது, பொன்னாங்காணி வேர், சிறுகீரை வேர் – சம எடை

செ.மு : இம்மூன்றையும் அரைத்து எலுமிச்சங்காயளவு எடுத்துப் பசுவின் பாலில் கரைத்துக் குடிக்கவும்.

அளவு : மூன்று நாட்கள் அல்லது நோய் தீரும் மட்டும்.

தீ.நோ : எலும்புருக்கி

## கற்கம் – 13

தே.பொ : முன்னை வேர் – எலுமிச்சங்காயளவு, பசுவின் வெண்ணெய்

செ.மு : முன்னைவேரைத் தண்ணீர் விட்டரைத்து, பசுவின் வெண்ணெய் கூட்டி விழுங்க வேண்டும்.

தீ.நோ : செத்த பிள்ளை விழும்.

## கற்கம் – 14

தே.பொ : நத்தைச் சூரிவேர்

செ.மு : நத்தைச்சூரி வேரை இடித்துக் கற்கமாக்கிக் கொள்ளவும்.

அளவு : கழற்சிக்காய் அளவு விழுங்கவும்.

தீ.நோ : மூலம்

## கற்கம் – 15

தே.பொ : இரசம் – 1 பங்கு, கெந்தகம் – 2 பங்கு, மிளகு – 3 பங்கு, வெங்காரம் – 4 பங்கு, சுக்கு – 5 பங்கு, கடுக்காய் – 6 பங்கு, வாளம் 100 பங்கு

செ.மு : மேற்கூறிய சரக்குகளை நீரில் விழுது போல் அரைத்துக் கொள்ளவேண்டும்.

அளவு : 135 மி.கி.

து. ம : வென்னீர்

தீ.நோ : பேதி, குன்மம், வயிற்று வியாதி, பாண்டு, மந்த சிலேட்டுமம்.

## கற்கம் – 16

தே.பொ : சாதிலிங்கம், அதிமதுரம், கடுகுரோகணி, திப்பிலி – சம அளவு, வாளம் – இவற்றிற்குச் சரி எடை.

செ.மு : மேற்கூறிய சரக்குகளைக் கூட்டி எலுமிச்சம் பழச் சாற்றில் அரைத்துக் கொள்ள வேண்டும்.

அளவு : 135 மி.கி.

து. ம : இஞ்சிச் சாறு

தீ.நோ : சுரம்

குறிப்பு: *சுரம் அதிகமானால் முருங்கையிலைச் சாறு பருகவும்.*

## கற்கம் – 17

தே.பொ : கழற்சிக் கொடி வேர்

செ.மு : கழற்சிக்கொடி வேரை அரைத்துக் கற்கமாக்கிக் கொள்ளவும்.

அளவு : தேவைக்கேற்ப

து.ம : இளவெந்நீர்

தீ.நோ : சுருட்டைப் பாம்பு விடம்

## கற்கம் – 18

தே.பொ : வெள்ளுசிலைப் பட்டை

செ.மு : வெள்ளுசிலைப் பட்டையை அரைத்துக் கற்கமாக்கிக் கொள்ளவும்.

அளவு : தேவைக்கேற்ப கொடுக்கவும்.

து.ம : இளவெந்நீர்

தீ.நோ : ஓலைப் பாம்பு விடம்

## கற்கம் – 19

தே.பொ : வேப்பிலை

செ.மு : வேப்பிலையை இளவெந்நீரில் அரைத்து கற்கமாக்கிக் கொள்ளவும்.

தீ.நோ : கருவழலை விடம்

## கற்கம் – 20

தே.பொ : பெருங்காயம், இந்துப்பு, புளியவேர் காடி தேவையான அளவு

செ.மு : மேற்கூறிய சரக்குகளைக் கற்றாழைச்சாறு விட்டு அரைத்துக் காடி கூட்டிக் கொடுக்கவும்.

அளவு : இருவேளை, இருபது நாட்கள்

து.ம : பாற்சோறு

தீ.நோ : வயிற்றுப் புண்கள் நீங்கும். உடல் குளிர்ச்சி அடையும்.

குறிப்பு: *கழிபடும்போது இறைச்சி கழுவின தண்ணீர் போலவே விழும்.*

## கற்கம் – 21

தே.பொ : உள்ளி, சுக்கு, மிளகு, கடுக்காய், இலுப்பைப் பிண்ணாக்கு, வெற்றிலை, கல்லுப்பு, கழல்கொடி பருப்பு – வகைக்குச் சம எடை

செ.மு : மேற்கூறிய பொருட்களை அரைத்து வைத்துக் கொள்ளவும்.

அளவு : தேவையான அளவு

து.ம : வென்னீர்

தீ.நோ : கட்டி, வயிற்றுவலி.

## கற்கம் – 22

தே.பொ : வெள்ளைக்காவேளை சமூலம் – தேவையான அளவு

செ.மு : சமூலத்தை அரைத்து வெள்ளாட்டுப் பாலில் குடிக்கவும்.

அளவு : தேவையான அளவு

து.ம : வெள்ளாட்டுப் பால்

தீ.நோ : எலிக்கடி

## கற்கம் – 23

தே.பொ : வில்வ வேர், சுடு துரத்தி எனும் சித்திரப் பாலாடை வேர், துளசி, கொன்றை வேர்.

செ.மு : மேற்கூறிய பொருட்களில் ஏதேனும் ஒன்றை இளவென்னீரில் அரைத்துக் கற்கமாக்கிக் கொள்ளவும்.

அளவு : விடத்தின் வன்மை, தன்மை அறிந்து உண்ண வேண்டும்.

தீ.நோ : விடம்

## கற்கம் – 24

தே.பொ : பொன்முசுட்டை வேர்

செ.மு : பொன்முசுட்டை வேரை இளவென்னீரில் அரைத்துக் கற்கமாக்கிக் கொள்ளவும்.

அளவு : விடத்தின் தன்மைக்கேற்ப, நோய் தீரும் வரை.

தீ.நோ : புடையன் விடம்

## கற்கம் – 25

தே.பொ : சுக்கு, திப்பிலி, சித்தரத்தை, தேசாவரம், நேர்வாளம், பூண்டு, காயம், ஓமம், கோஷ்டம், அக்கிராகாரம் இந்துப்பு, வளையலுப்பு, மருந்துக்காருப்பு, – வகைக்கு 350 கி.

செ.மு : மேற்கூறியவற்றைச் சுத்தி செய்து வைத்துக் கொள்ளவும். வேண்டிய போது இதை அம்மியிலிட்டு தேன் விட்டு அரைத்துக் கொள்ளவும்.

அளவு : காலை, மாலை மூன்று நாட்கள்

தீ.நோ : வாய்வு

பத்தியம் : புளி, புகையிலை தள்ளவும்

## கற்கம் – 26

தே.பொ : ஆவாரங்கொழுந்து, ஆவாரம் பூ, பசும்பால் – தேவையான அளவு

செ.மு : இரண்டையும் பசும்பாலில் அரைத்துக் கொடுக்கவும்.

அளவு : தேவைக்கேற்ப

தீ.நோ : நீரிழிவு

## கற்கம் – 27

தே.பொ : மிளகு – 100 கி கோழியவரைச்சாறு, பால்

செ.மு : மிளகு எலுமிச்சங்காயளவு அரைத்துக் கோழிய வரைச்சாறு, பாலுடன் பிசைந்து கொடுக்கவும்.

அளவு : காலையில் மட்டும் மூன்று நாட்கள்

தீ.நோ : சகல வண்டுக்கடி, சகல கடிகள்

பத்தியம் : உப்பு, புளி ஆகாது

குறிப்பு : *மருந்து சாப்பிட்ட நாள் மாலை மோர், கஞ்சி கொடுக்கவும். உடம்பு சூடானால் தலையில் தேவையான அளவு நீர் சேர்க்கவும்.*

## கற்கம் – 28

தே.பொ : தேற்றான் கொட்டை, பலகரை – 4 கி, வெண்காரம் – 4 கி, எலுமிச்சம் பழச்சாறு – 325 மி.லி.

செ.மு : தேற்றான் கொட்டையைப் பசுவின் கோமியத்தில் ஊறப்போடவும். பிறகு மேற்கூறிய பொருட்களையும் சேர்த்து எலுமிச்சம் பழச் சாற்றில் அரைத்துக் குடிக்கவும்.

தீ.நோ : வண்டு கடி

❖❖❖❖❖

# 4. உட்களி வகைகள்

## உட்களி – 1

தே.பொ : பொன்னாவிரை இலை, பசும்பால், வெல்லம் – வகைக்குச் சம எடை, வன்னிப்பட்டை, கருங்குருவை அரிசி – சம எடை

செ.மு : பொன்னாவிரை இலையைத் துவைத்துச் சாறு பிழிந்து கொள்ளவும். பிறகு இத்துடன் பசும் பாலும், வெல்லமும் சேர்த்துக் காய்ச்சி வடித்துச் சாப்பிடவும்.

பிறகு வன்னிப்பட்டையையும், அரிசியையும் ஒன்றாகப் போட்டு இடித்து அள்ளிக் கொண்டு நல்லெண்ணெய் விட்டுப் பிசைந்து பிட்டுக் கருப்பட்டி சேர்த்துக் கரைத்து அடுப்பில் வைத்து களிபதம் வருகிற வரையில் வேக விட்டுக் கிளறி களிகிண்டி வைத்துக் கொள்ளவும்.

அளவு : மூன்று நாட்கள்

தீ.நோ : வெள்ளைப் படுதல்

பத்தியம் : கைப்பு, புளிப்பு தவிர்க்கவும்.

குறிப்பு: *முருங்கைக்காய், இலை, சுண்டி இலை, பிண்ணாக்கு நல்லெண்ணெய் வார்த்து சாப்பிடவும்.*

## உட்களி –2

தே.பொ : சிலந்தி நாயகக் கிழங்கு, குருவையரிசி

செ.மு : சிலந்தி நாயகக் கிழங்கைக் குருவையரிசியில் இடித்து மாவாக்கிக் கொள்ள வேண்டும். ஒரு பகுதியை மட்டும் களி கிண்டிக் கொள்ள வேண்டும்.

அளவு : இடித்த பச்சை மாவு ஒரு பிடி, களி தேவையான அளவு

தீ.நோ : சிலந்திக்கடி, தலை மண்டை வியாதி.

❖❖❖❖❖

# 5. அடை வகைகள்

## அடை – 1

தே.பொ : கோழி முட்டை – 2, மிளகு, உப்பு – சிறிதளவு

செ.மு : கோழி முட்டையை உடைத்து ஊற்றி அதில் உப்பு, மிளகு இரண்டையும் பொடி செய்து கலந்து வைத்துக் கொள்ளவும். சட்டியை அடுப்பில் வைத்து அதில் சிறிது நெய் தடவி முட்டையை அடையாய் இட்டு வெந்தபின் எடுத்துக் கொள்ளவும்.

அளவு : அடையைச் சாப்பிடவும்

தீ.நோ : நான்காம் மாறல் சுரம்.

## அடை – 2

தே.பொ : கையாந்தகரை, நாயுருவி, தூதுவளை வகைக்குச் சம எடை, எருக்கம்பூ – 10, வேலிப்பருத்தி இலை – 4, குருணை அரிசி – சம எடை

செ.மு : குருணை அரிசியுடன் மேற்கூறிய சரக்குகளைச் சேர்த்து அரைத்துக் கொள்ளவும். சட்டியை அடுப்பில் வைத்து அதில் சிறிது நெய் தடவி அரைத்த மாவை இட்டு அடையாய்த் தட்டி வெந்தபின் எடுத்துக் கொள்ளவும்.

அளவு : ஒன்று அல்லது இரண்டு அடை.

தீ.நோ : இருமல்.

## அடை – 3

தே.பொ : நீர்மேல் நெருப்பு, கருங்குருவை அரிசி.,

செ.மு : நீர் மேல் நெருப்பைக் கருங்குருவை அரிசியுடன் சேர்த்து அடை சுட்டுச் சாப்பிடவும்.

அளவு : வேளைக்கு ஒரு அடையைச் சாப்பிடவும்

தீ.நோ : புண்.

### அடை – 4

தே.பொ : நீர்ப்பூலா, புழுங்கலரிசி,

செ.மு : இவ்விரண்டையும் தனித்தனியே எலுமிச்சங் காயளவு அரைத்து ஒன்றாய்க் கூட்டி உருட்டி நல்லெண்ணெயில் சுட்டுச் சாப்பிடவும்.

அளவு : 3 நாட்கள்

தீ.நோ : தோல் நோய்கள்

❖❖❖❖❖

# 6. சூரண வகைகள்

### சூரணம் – 1

தே.பொ : சுக்கு, எருக்கம்பால்.

செ.மு : சுக்கை நாற்பது நாட்கள் எருக்கம் பாலிலே ஊற வைத்து நிழலில் உலர்த்திப் பொடி செய்து கொள்ளவும்.

அளவு : 4 கி

து. ம. : இளவென்னீர்

தீ.நோ : விடம்

குறிப்பு: *விடம் தலை மண்டைக்கேறினால் 4 கி பொடி சாப்பிடவும்.*

### சூரணம் – 2

தே.பொ : இரசம் – 4.4 கி, கெந்தகம் – 8.8கி, அரப்பொடி – 13.2 கி.

செ.மு : மேற்கூறிய பொருட்களைக் கற்றாழைச்சாறு வார்த்து அரைத்து வெயிலில் உலர வைத்துக் கொள்ளவும். பிறகு எடுத்துப் பொடி செய்து வைத்துக் கொள்ளவும்.

அளவு : 488 மி.கி எடுத்து வெற்றிலையில் வைத்துச் சாப்பிடவும்.

தீ.நோ : குன்மம்

## சூரணம் – 3

தே.பொ : படிகாரம், நெல்லிக்காய், கற்கண்டு.

செ.மு : படிகாரத்தைப் பொரித்துப் பொடி செய்து கொள்ளவும். அந்த எடைக்குக் கற்கண்டும், நெல்லிக்காயும் சேர்த்துக் கொள்ளவும். நெல்லிக்காயின் மேல் தோலைப் பொடித்து வைத்துக் கொள்ளவும். இவற்றை எல்லாம் வஸ்திரகாயஞ் செய்து வைத்துக் கொள்ளவும்.

அளவு : ஒரு வேளைக்கு 8 கி. வீதம் நாளொன்றுக்கு மூன்று வேளை சாப்பிடவும். இந்தப்படி ஏழு நாட்கள் சாப்பிடவும்.

து. ம. : பசுவின் மோர்

தீ.நோ : வெள்ளை, நீர்க்கடுப்பு

குறிப்பு: *மருந்து சாப்பிடும் பொழுது இருமல் கண்டால் பசுவின் பாலைக் கறந்து அப்படியே நுரையோடே சாப்பிடவும்.*

## சூரணம் – 4

தே.பொ : இரதம், கெந்தகம், சாதிலிங்கம், அரப்பொடி, காந்தம், பெருங்காயம், கற்றாழைச்சாறு.

செ.மு : இரதம், கெந்தகம், சாதிலிங்கம், அரப்பொடி, காந்தம், பெருங்காயம் இவற்றைச் சேர்த்து கற்றாழைச்சாறு விட்டு அரைத்துச் சில்லு தட்டி உலர வைத்துப் பொடி செய்து கொள்ளவும். இப்படி ஐந்து முறை குமரிச்சாறு விட்டரைக்க வேண்டும். ஒவ்வொரு முறை அரைக்கும் போதும் மூன்று மணி நேரமரைத்து உலர்த்திப் பொடி சேர்த்துக் கொள்ளவும்.

அளவு : 500 மி. கி. வீதம்

து. ம. : தேன்

தீ.நோ : சகல வியாதி

பத்தியம் : பால், நெய், வெள்ளாட்டு உப்புக் கண்டம்.

## சூரணம் – 5

தே.பொ : வெள்ளாட்டுக் கோமியம் – 5½ லி, புங்கனிலை, மாவிலிங்கிலை, சங்கிலை, விழுதியிலை நொச்சியிலை, எருக்கம் பழுப்பு.

செ.மு : மேல் உள்ளவைகளை ஒவ்வொன்றிலும் ஒரு பிடி கூட்டி இடித்துக் கோமியத்தில் அரைத்து வடித்து அந்தச்சாறு வற்றும் மட்டும் இருப்புக் கிட்டம் போட்டுக் காய்ச்சி, மறுநாள் வேண்டியதை எடுத்துப் பொடி பண்ணி, 330 கி பொடிக்கு மிளகு 250 கி, திப்பிலி 160 கி, கடுகுரோகணி 4 கி, ஊசிக்காந்தம் – 4 கி பொடி செய்து வைத்துக் கொள்ள வேண்டும்.

அளவு : வெருகடிப் பிரமாணம் – சந்தியிலும், வெருகடியில் பாதி–அந்தியிலும் கொள்ளவும்

தீ.நோ : ஊதுகாமாலை, வறட்காமாலை, இளைப்பு, நாள்பட்ட சோகை.

பத்தியம் : புளி தவிர்க்கவும்

குறிப்பு: *மருந்து சாப்பிடும் முன் மோர் சாதம் சாப்பிட வேண்டும்.*

## சூரணம் – 6

தே.பொ : சுக்கு 24 கி, அரத்தை, கண்டதிப்பிலி, திப்பிலி, ஏலம், கிராம்பு சாதிக்காய், சாதிபத்திரி, மிளகு, வெள்ளைமிளகு, கடுக்காய், கருஞ்சீரகம், கசகசா, நேர்வாளம், வகைக்கு 12கி, நிலவாகைவேர், கண்டங்கத்திரிவேர், பேய்க் கொம்மட்டிவேர், அழிஞ்சிவேர் வகைக்கு 6கி.

செ.மு : மேற்கூறிய எல்லாச் சரக்குகளும் இடித்துச் சூரணம் செய்து கொள்ள வேண்டும்.

தீ.நோ : பேதியாக

குறிப்பு: *பேதி அதிகமானால் மோர் சாதம் சாப்பிடவும்.*

## சூரணம் – 7

தே.பொ : தாளிச பத்திரி – 350 கி, சுக்கு, மிளகு, திப்பிலி, கடுக்காய், தான்றிக்காய், நெல்லிமுள்ளி, கோஷ்டம், அக்கிராகாரம், கிராம்பு, ஏலம், சாதிக்காய், சாதிபத்திரி, சடாமாஞ்சில், சோம்பு, வால் மிளகு, இலவங்கப்பட்டை – இவை வகைக்கு 35கி.

செ.மு : மேற்படி பொருட்களைச் சூரணம் செய்து சலித்து நீர் 70 கி, சர்க்கரை – 200 கி போட்டுப் பிசைந்து கொள்ள வேண்டும்.

அளவு : மூவிரலளவு, 48 நாட்கள், 3 வேளை

தீ.நோ : சயம், காசம், ஈளை, அத்திசுரம், அஸ்திவெட்டை, தாகம், நெஞ்சில்புண், பித்த வெட்டை, பித்தபாண்டு, கிராணி, அரோசிகம், அன்னதோஷம், வயிறுவிம்மல், விக்கல், கக்கல், கைகால் எரிவு, காந்தல்.

பத்தியம் : புளி, புகையிலை தள்ளவும்.

## சூரணம் – 8

தே.பொ : தான்றிக்காய், சர்க்கரை.

செ.மு : தான்றிக்காயைச் சுட்டு சூரணம் செய்து கொள்ளவும். சமனெடை சர்க்கரை சேர்த்துக் கொள்ளவும்.

அளவு : நாள் ஒன்றுக்கு 4 கி வீதம் வென்னீரில் சாப்பிடவும்.

து. ம. : வென்னீர்

தீ.நோ : ஒக்காளம்.

## சூரணம் – 9

தே.பொ : ஆனைத்திப்பிலி, தேன்.

செ.மு : ஆனைத்திப்பிலியைப் பொடி செய்து தேனில் குழைத்துச் சாப்பிடவும்.

அளவு : நோயின் வன்மை, நோயாளியின் தன்மை அறிந்து கொடுக்கவும்.

தீ.நோ : இருமல், ஈளை, செரியாமை, வயிற்றுப்பிசம்.

## சூரணம் – 10

தே.பொ : திப்பிலி, வெற்றிலை, தேன்.

செ.மு : திப்பிலியைப் பொடி செய்து, பச்சை வெற்றிலைச் சாறும் தேனும் சேர்த்துக் கொடுக்கவும்.

தீ.நோ : சயித்தியம் எனும் சீதளநோய்.

## சூரணம் – 11

தே.பொ : தாளிசபத்திரி, அதிமதுரம், கொத்துமல்லி, சன்னலவங்கம், இலவங்கப்பத்திரி – இவை வகைக்கு 17 கி, கோஷ்டம், ஓமம், ஏலம், செங்கழுநீர் – இவை வகைக்கு 8 கி. திரிபலை – 105 கி, நல்ல சீரகம் – 35 கி

செ.மு : மேற்கூறிய பொருட்களின் அளவிற்குச் சம எடை பனஞ் சர்க்கரை கலந்து வேடுகட்டி வைக்கவும்.

அளவு : மூவிரலளவு சாப்பிடவும்.

தீ.நோ : திரிதோடம், கபப்பிணிகள் தீரும். பசி உண்டாகும்.

## சூரணம் – 12

தே.பொ : ஓமம், குரோசாணி ஓமம், நாய்க்கடுகு – 35 கி பனைவெல்லம் – 52 கி

செ.மு : மேற்கூறிய சரக்குகளைப் பொடி செய்து பனை வெல்லத்தில் பிசைந்து சாப்பிடவும்.

அளவு : காலை, மாலை மூன்று நாட்கள், புளியங்கொட்டை அளவு.

துு. ம. : பனைவெல்லம்

தீ.நோ : உஷ்ணவாயு போக்கும், பசியை உண்டாக்கும்.

## சூரணம் – 13

தே.பொ : சுக்கு, மிளகு, திப்பிலி, ஏலம், சீரகம் – வகைக்கு 35 கி, சர்க்கரை – 175 கி

செ.மு : மருந்து சரக்குகளை இள வறுப்பாய் வறுத்துப் பொடித்து வடிகட்டி சூரணமாகச் செய்து கொள்ளவும். சர்க்கரை, தேன் விட்டுப் பிசைந்து சாப்பிடவும்.

அளவு : மூன்று விரல் கொள்ளளவு.

து. ம. : சர்க்கரை, தேன்

தீ.நோ : உஷ்ண வியாதி, சூலை, வாய்வு, பித்த வாயு, சிலேற்றுமம், பொருமல், செரியா மந்தம், மயக்கம், கிறுகிறுப்பு, அஸ்திசுரம், அஸ்தி வெட்டை.

## சூரணம் – 14

தே.பொ : வல்லாரைத் தூள் – 350 கி, கிராம்பு, ஏலம், சாதிக்காய், சாதிபத்திரி, மாசிக்காய், தாளி சப்பத்திரி, கடுக்காய், தான்றிக்காய், நெல்லிமுள்ளி – வகைக்கு 35 கி

செ.மு : வல்லாரையை அவித்து, காய வைத்துத் தூள் செய்து கொள்ளவும். மற்ற பொருட்களை இளவறுப்பாய் வறுத்துப் பொடித்துச் சூரணம் செய்து கொள்ளவும். இரண்டு சூரணத்தையும் ஒன்றாய்ச் சேர்த்துக் கொள்ளவும். சூரணத்தின் அளவிற்குச் சரிசமன் சர்க்கரை சேர்த்துக் கொள்ளவும்.

அளவு : வேளைக்கு மூன்று விரல் கொள்ளளவு.

து. ம. : நெய்.

தீ.நோ : மூளை மந்தத்தை மாற்றி, ஊக்குவிக்கும்.

## சூரணம் – 15

தே.பொ : தாளிசபத்திரி, அதிமதுரம், கொத்துமல்லி, சன்னலவங்கம், இலவங்கப்பத்திரி வகைக்கு 24 கி, குரோசாணி ஓமம் 8 கி, ஏலம் – 8 கி, திரிபலை – 70 கி, செங்கழுநீர் – 8 கி கோட்டம் – 8 கி, கிராம்பு – 8 கி, நற்சீரகம் – 35 கி

செ.மு : மேற்கூறிய சரக்குகளைப் பொடி செய்து துணியிலிட்டுச் சலித்துக் கொண்டு இவற்றுடன் சர்க்கரை கலந்து பாத்திரத்தில் உள்ளே வைத்து வாயைச் சீலைத் துணியால் மூடி வைத்துக் கொள்ளவேண்டும்.

அளவு : மூவிரல் அளவு

தீ.நோ : உஷ்ணவாயு மாறும், பசி உண்டாகும்.

## சூரணம் – 16

தே.பொ : பருத்திக்கொட்டை வறுத்திடித்தது–1008 மி.கி., நெற்பொரி – 672 மி.கி., ஏலம் – 35 கி, சுக்கு – 8 கி திப்பிலி – 8 கி

செ.மு : மேற்கூறிய சரக்குகளைப் பொடி செய்து இவற்றுடன் சமஅளவு சர்க்கரை கலந்து கொள்ள வேண்டும்.

அளவு : காலை, மாலை மூவிரலளவு

தீ.நோ : உஷ்ணரோகம்

## சூரணம் – 17

தே.பொ : நறுவிலியின் பிஞ்சு, கருவேலின் பிஞ்சு, காட்டுப் பிரண்டை இலை

செ.மு : இவற்றைத் தனித்தனியாக நிழலில் உலர்த்தி இடித்துச் சூரணமாகச் செய்து கொள்ளவும்.

சூரணத்திற்குச் சம எடை சர்க்கரையை அதனுடன் கலந்து கொள்ளவும்.

அளவு : மூவிரல் அளவு, இரவு பதினைந்து நாட்கள் சாப்பிடவும்.

து. ம. : சர்க்கரை

தீ.நோ : இந்திரிய புஷ்ட்டி உண்டாகும்.

குறிப்பு: *இரவில் சாப்பிட்ட பிறகு இம்மருந்து சாப்பிடவும், பிறகு 336 மி.லி. பால் சாப்பிடவும்.*

## சூரணம் – 18

தே.பொ : சுக்கு, மிளகு, ஏலம், கிராம்பு, திப்பிலி – வகைக்கு 5 கி, மாதுளை ஓடு, நெற்பொரி வகைக்கு 975 மி.லி.

செ.மு : தலைமயிரைச் சுட்டு சாப்பிடவும். மேற்கூறிய இவற்றைப் பொடி செய்து தேனில் குழப்பிக் கொள்ளவும்.

அளவு : தேனில் குழப்பி நாக்கில் தடவவும்.

தீ.நோ : வாந்தி.

## சூரணம் – 19

தே.பொ : சன்னலவங்கப்பட்டை, சிகப்பு நிறமான காவி, சந்தனத்தூள் – வகைக்கு – 4கி

செ.மு : இச்சரக்குகளைப் பொடித்துத் தூள் செய்து கொள்ளவும். இத்துடன் வெள்ளைச் சர்க்கரை 24 கி சேர்த்துக் கலக்கிக் கொள்ளவும்.

அளவு : நோயின் வன்மை, நோயாளியின் தன்மை அறிந்து கொடுக்கவும்.

தீ.நோ : இருதயம் பலம் பெறும்.

## சூரணம் – 20

தே.பொ : குலாப்பு எனும் ரோஜாத் தூள், சந்தனத்தூள், காவிக்கல், சாதிக்காய்த் தூள் – வகைக்கு 4 கி

செ.மு : மேற்கூறப்பட்டுள்ள சரக்குகளை 5 எலுமிச்சம் பழரசத்தில் கலந்து வைத்துக் கொள்ளவும்.

அளவு : வேளைக்கு 12 கி சாப்பிடவும்.

தீ.நோ : இருதயம் பலம் பெறும்

## சூரணம் – 21

தே.பொ : வால்மிளகு – 6 கி

செ.மு : வால்மிளகைப் பொடி செய்து வஸ்திரகாயம் செய்து கொள்ளவும்.

அளவு : நோயின் வன்மை, நோயாளியின் தன்மை அறிந்து கொடுக்கவும்.

து. ம. : தண்ணீரில் குடிக்கவும்

தீ.நோ : நீரடைப்பு

## சூரணம் – 22

தே.பொ : திப்பிலி – தேவையான அளவு

செ.மு : திப்பிலியை அரைத்து வஸ்திரகாயம் செய்து வைத்துக் கொள்ளவும்.

அளவு : நோயின் தன்மைக்கேற்ப

து. ம. : தேனில் குழைத்துச் சாப்பிடவும்.

தீ.நோ : புகையிருமல்

## சூரணம் – 23

தே.பொ : உத்தாமணி சமூலம்

செ.மு : உத்தாமணியைப் பொடித்துச் சூரணம் செய்து கொள்ளவும். பாலில் கலந்து கொடுக்கவும்.

துு. ம. : பால்

தீ.நோ : உப்பிசம்

## சூரணம் – 24

தே.பொ : சங்கன் வேர் இடித்தது, மிளகு 650 கி.

செ.மு : சங்கன் வேர்த் தூளையும், மிளகுப் பொடியையும் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

து. ம. : எருமை மோர்.

தீ.நோ : நீரேற்றம், சுரம், வயிற்றுக்கிருமி.

பத்தியம் : பத்தியம் இருக்கவும்.

## சூரணம் – 25

தே.பொ : கடுக்காய்

செ.மு : கடுக்காயின் விதையை நீக்கிப் பொடி செய்து கொள்ளவும்.

அளவு : தேவையான அளவு ஒரு கரண்டியில் போட்டு நல்லெண்ணெயில் குழப்பிக் கொடுக்கவும்.

து. ம. : நல்லெண்ணெய்

தீ.நோ : இரத்தக் கழிச்சல்

பத்தியம் : எருமைத் தயிருஞ் சோறும் சாப்பிடவும்.

## சூரணம் – 26

தே.பொ : சத்திச்சாரணை வேர், சுக்கு, மிளகு, திப்பிலி, பாதிரி வேர் – வேண்டிய அளவு, பசும்பால் – தேவையான அளவு

செ.மு : சாரணைவேரைப் பசும்பாலில் வேக வைத்து உலர்த்திப் பொடித்துக் கொள்ளவும். மற்றவற்றையும் பொடித்துக் கலந்து கொள்ளவும்.

துு. ம. : விளக்கெண்ணெய், நெய், சர்க்கரை.

தீ.நோ : வாதம், வாய்வு, பசி, பித்தம், பாண்டு, அரோசிகம்.

பத்தியம் : கசப்பு, புளிப்பு ஆகாது.

### சூரணம் – 27

தே.பொ : வால் மிளகு – 6 கி,

செ.மு : வால் மிளகை இடித்துச் சூரணமாகச் செய்து கொள்ளவும். 350 மி.லி தண்ணீரில் கரைத்துக் கொள்ளவும்.

அளவு : 16 மி.லி. – 30 மி.லி நாளொன்றுக்கு 4 வேளை.

தீ.நோ : நீரடைப்பு.

❖❖❖❖❖

# 7. பிட்டு வகைகள்

### பிட்டு – 1

தே.பொ : நீர்முள்ளி விரை, கருங்குறுவை அசிரி.

செ.மு : மேற்கூறிய பொருட்களை இடித்துப் பிட்டு போல் அவித்துக் கொள்ள வேண்டும். பசுவின் நெய் விட்டு சாப்பிடவும்.

அளவு : ஏழு நாட்கள்

துு. ம. : பசுவின் நெய்

தீ.நோ : வயிற்றுக்கடுப்பு, வெட்டை, மூலக்கடுப்பு

### பிட்டு – 2

தே.பொ : கருக்குவாளியின் வேர், பட்டை, குறுவையரிசி

செ.மு : சுருக்குவாளியின் வேர், பட்டைகளைப் பானையில் போட்டு தண்ணீர் விட்டு வேக வைத்து 450 கி.கி. அரிசியை இந்நீரில் ஊற வைத்து இடித்து அதே நீரில் பிசைந்து பானை வாயில் சீலை கட்டி பிட்டவித்து வைத்துக் கொள்ளவும்.

அளவு : மூன்று நாட்கள்

தீ.நோ : சகல வண்டு கடிகள்

பத்தியம் : ஆறு நாட்கள் பத்தியம் காக்கவும்.

குறிப்பு: *புண்களுக்கு மாம்பழக் கொட்டையின் மேலோட்டை அரைத்து மேல்புறம் எல்லா இடங்களிலும் பூசவும். காலை சாப்பாடு சாப்பிட்டு மருந்து பூசி, மாலையில் வேதுத் தண்ணீரில் குறிக்கவும்.*

❖❖❖❖❖

# 8. மணப்பாகு

தே.பொ : (அ) வில்வவேர், நெற்பொரி, சீந்தில் தண்டு, முருங்கைக்காய், பூ

(ஆ) சுக்கு, மிளகு, திப்பிலி, கிராம்பு, ஏலரிசி, இந்துப்பு, கோட்டம், அக்கிராகாரம், அதிமதுரம், பசும்பால் – தேவையான அளவு

(இ) வெள்ளை வெங்காயம் – 140 கி. சர்க்கரை, அரிசித்திப்பிலி, தேன்

செ.மு : 'அ' பிரிவிலுள்ள பொருட்களை இடித்துப் பசும்பாலில் அரைத்துக் கொள்ளவும்.

'ஆ' பிரிவிலுள்ள பொருட்களை இளவறுப்பாய் வறுத்துப் பசும்பாலில் அரைத்து மேற்சொன்ன விழுதையும் சேர்த்து எரித்துக் கொள்ளவும். மணம் வரும் பக்குவத்தில் 'இ' பிரிவிலுள்ளவற்றை நுணுக்கிச் சேர்த்து தேனையும் விட்டு இலேசாகக் கிளறி இறக்கி ஆற வைத்துக் கொள்ளவும்.

து. ம. : 15 கி, 1 நாள் சாப்பிடவும்.

தீ.நோ : வாந்தி.

❖❖❖❖❖

# 8. நெய் வகைகள்

## நெய் – 1

தே.பொ : அமிர்தவள்ளிக் கிழங்கு இடித்துப் பிழிந்த பால் – 5.3 லி, நெய்–1. 3 லி, பாலை வேர், இன்புறா வேர், குன்றி மணிவேர், சத்திச் சாரணைக்கிழக்கு, சமுத்திரசோகி விதை, வெற்றிலை – இவை ஒவ்வொன்றும் வகைக்கு 18 கி.

செ.மு : பாலைவேர் முதல் வெற்றிலை முடிய உள்ள சரக்குகளை அரைத்துக் கரைத்து வைத்துக் கொள்ளவும். வசுவாசி, சாதிக்காய், பச்சை வெட்டுச் சந்தனம் இவற்றை இடித்துத் தூளை நன்றாகச் சலித்து அரைத்துக் கரைத்துக் கலவையில் கலந்து நெய்யும் சேர்த்துக் கலந்து கொள்ளவும்.

அளவு : நோயின் தன்மை, நோயாளியின் வன்மை அறிந்து கொடுக்கவும்.

து. ம. : சர்க்கரை – 35 கி, கொப்பரைத் தேங்காய் – 35 கி, கற்கண்டு – 35 கி.

தீ.நோ : தாது விருத்தி

குறிப்பு: *மேற்படி நெய்யுடன் சர்க்கரை, கொப்பரைத் தேங்காய், கற்கண்டு இவற்றை இடித்து அந்நெய்யுடன் கலந்து சாப்பிடவும்.*

## நெய் – 2

தே.பொ : சிற்றாமல்லிவேர், பேராமல்லிவேர், கண்டங்கத்திரி, நாகனந்திவேர், வாலுளுவை அரிசி, மஞ்சிட்டி, மரமஞ்சள், விளாவரிசி, கோஷ்டம், மரமல்லிகை, மாதுளம் பிஞ்சு, நாகப்பூ, சிறுதேக்கு, சாதிக்காய், சுக்கு, திப்பிலி, மிளகு, பூனைக்காலிவிதை, சாதிபத்திரி, அமிர்தவள்ளிக்கிழங்கு – இவை வகைக்கு 4 கி, சந்தனம் – 35 கி

செ.மு : மேற்கூறிய சரக்குகளைப் பால்விட்டு அரைத்து 2.6 லி

நெய் சேர்த்து எரித்து வடித்துப் பதமாக இறக்கிக் கொள்ளவும். 35 கி சந்தனத்தைப் பொடி பண்ணி, இறக்கி வைத்துள்ள நெய்யில் போட்டுக் கலக்கவும்.

அளவு : 15 மி.லி. நோயின் தன்மை, நோயாளியின் வன்மை, மென்மைக்கேற்ப.

தீ.நோ : மலட்டு வலிப்பு, மலட்டு வாதம், தாது விருத்தி, முசலகன், ஊமைவாதம், கைகால் எரிப்பு, உச்சி எரிப்பு, மெய்முடங்கல், நீர்க்கடுப்பு, பிரமேகம், சோகை, கண் திகைத்தல்.

## நெய் – 3

தே.பொ : வரிக்கற்றாழை – தேவையான அளவு, பசுவின் வெண்ணை – விளாங்காயளவு

செ.மு : கற்றாழைச் சோறு எடுத்து மூன்று தடவை அலசி வழுக்கை இல்லாமல் எடுத்துக் கொள்ளவும். சட்டியைக் காய வைத்து அதிலே சோற்றினை இட்டு நீர் சுண்ட வறுத்து வெண்ணை விட்டு உருக வைத்து பொரி போல பதமாய் இருக்கும் போது இறக்கி வைத்துக் கொண்டு அந்த நெய்யைச் சாப்பிடவும்.

அளவு : தேவையான அளவு

தீ.நோ : வயிற்றில் வெட்டை வலி, கர்ப்பிணிப் பெண்களின் ஏழு மாத, எட்டு மாத வலி, வெட்டை.

## நெய் – 4

தே.பொ : இஞ்சி இலை – ஒரு பிடி ஈர வெங்காயம் – 280 கி, கருணைக்கிழங்கு – 280 கி, (பொடியாக நறுக்கியது), நெய் – தேவையான அளவு

செ.மு : இம்மூன்றுடன் பசுவின் நெய் சேர்த்துக் காய்ச்சும் போது கைசூடு பொறுக்கும் பக்குவத்தில் இறக்கி வைத்துக் கொள்ள வேண்டும்.

அளவு : எட்டு நாட்கள்

தீ.நோ : மூலவாயு, மூலக்கிராணி

## நெய் – 5

தே.பொ : (அ) நெருஞ்சி வேர், சிறுகீரை வேர், கண்ணுப்பீளை வேர், நாகிராஞ்சி சுட்ட தண்ணீர், தண்ணீர் மீட்டான் கிழங்கு, வட்டலாத்திக் கிழங்கு –தேவையான அளவு

(ஆ) ஈர வெங்காயச்சாறு – 325 மி.லி.

(இ) அதிமதுரம், சீரகம், ஏலரிசி, கிராம்பு, வெண்காரம், – வகைக்கு 12 கி

செ.மு : மேற்கூறிய சரக்குகளுடன் பசுவின் நெய் சேர்த்துக் காய்ச்சிக் கொள்ளவும்.

அளவு : நோயின் தன்மைக்கேற்ப.

தீ.நோ : துன்மாங்கிஷம், கல்லடைப்பு, நீரடைப்பு, சதையடைப்பு, இந்திரியக்கட்டு.

குறிப்பு : *கொர்ப்பிணியான பெண்களுக்கு நீரடைத்தாலும், ஆண் பிள்ளைகளுக்கு நீரடைத்தாலும் மூத்திரக் கிரிச்சரம் என்றறியவும்.*

## நெய் – 6

தே.பொ : வாழைக்கிழங்குச் சாறு, நெல்லிக்காய்ச் சாறு பொன்னாங்காணிச்சாறு, தேவையான அளவு, சர்க்கரை–70 கி, இளநீர், பசும்பால், பசுநெய்– வகைக்கு 2.6, நன்னாரி வேர், கோட்டம், கிராம்பு, சடாமாஞ்சில், பூலாங்கிழங்கு, பேரீச்சம் பழம், அதிமதுரம், நற்சீரகம், சாதிக்காய், முந்திரிப்பழம் – வகைக்கு 13 கி.

செ.மு : மேற்கூறிய பொருட்களைச் சாறூற்றி அரைத்து இளநீர், பால், நெய் சேர்த்துக் காய்ச்சிப் பதத்தில் வடிகட்டிக் கொள்ளவும்.

அளவு : ஒரு வேளை 15 மி.லி.

தீ.நோ : அங்கத்தாபம் எனும் உடல்வறட்சி, எரிவு, பித்தம்.

❖❖❖❖❖

# 9. இளக வகைகள்

## இளகம் – 1

தே.பொ : புரசம் விதைகள், பசுவின் பால், நெய், சர்க்கரை – தேவையான அளவு

செ.மு : புரசம் விதைளை அரைக்கவும், அதனுடன் பசுவின் பால், நெய், சர்க்கரை சேர்த்து லேகியமாகக் கிளறி வைத்துக் கொள்ளவும்.

அளவு : வேளைக்குக் கழற்சிக்காய் அளவு.

தீ.நோ : குழந்தைகளின் வயிற்றிலுள்ள பூச்சிகள் விழும்.

## இளகம் – 2

தே.பொ : சுக்கு, மிளகு, கண்டதிப்பிலி, பரங்கிப்பட்டை, பனங்கிழங்கு, வாய்விளங்கம், ஓமம், கோட்டம், வால்மிளகு, சித்தரத்தை, கிராம்பு, கோதுமை, அரிசி, கற்கடகசிங்கி, சர்க்கரை, சிவனார் வேம்பு எனும் சித்திரப்பாலாடை, சுடுதுரத்தி எனும் சித்திரப் பாலாடை வேர், சய்யக் கொண்டான் வேர், முக்காவேளை வேர், பிஞ்சான வசநாபிக் கிழங்கு, சங்கம் வேர், பசு நெய், சர்க்கரை – தேவையான அளவு

செ.மு : மேற்குறிப்பிட்ட பொருட்களை இடித்துத் தூளாக்கி வடித்து அதனுடன் பசு நெய், சர்க்கரை போட்டுக் கலக்கி இளகமாக்கி வைத்துக் கொள்ளவும்.

அளவு : கழற்சிக்காய் (அ) நெல்லிக்காயளவு

தீ.நோ : வெட்டை, பிடிப்பு, வாதப்பிடிப்பு, இடுப்புப் பிடிப்பு.

பத்தியம் : இச்சாபத்தியம்.

## இளகம் – 3

| | | |
|---|---|---|
| தே.பொ | : | சீரகம், ஏலம், கிராம்பு, சாதிக்காய், வால்மிளகு, ஈரவெங்காயம், சன்னலவங்கம், சர்க்கரை, முந்திரிப்பழம், பேரீச்சம்பழம், அதிமதுரம், காட்டு மருந்து, கோரோசனை, பொன்னாங்காணி, பழம்பாசி, சீந்தில்தண்டு, வன்னித்தீ எனும் நவச்சாரம், ஓரிலைத் தாமரை, காத்தட்டி, எலுமிச்சம் பழச்சாறு, இளநீர், பசுநெய். |
| செ.மு | : | மேற்குறிப்பிட்டவற்றை இடித்துச் சாறு பிழிந்து எலு மிச்சம்சாறு, இளநீர், பசுநெய் கூட இட்டு அரைத்து லேகியமாக்கிக் கொள்ளவும். |
| அளவு | : | கழற்சிக்காய் அளவு. |
| தீ.நோ | : | வெட்டை, கெந்ததாளி எனும் குழந்தைகட்குக் காணும் வாய்விரண நோய், காய்ச்சல், உழலை, பயித்தியம். |
| பத்தியம் | : | செம்மறி ஆட்டுக்கறி, கொள்ளு, கரப்பான் பண்டம் தவிர்க்கவும். |

## இளகம் – 4

| | | |
|---|---|---|
| தே.பொ | : | ஏலரிசி, கிராம்பு, அதிமதுரம், கோஷ்டம், நற்சீரகம், சுக்கு, திப்பிலி, சித்தரத்தை, கடுகுரோகணி, வால் மிளகு, மிளகு, அதிவிடையம், கடுக்காய், இந்துப்பு – வகைக்கு 20 கி, தூதுளம் பழச்சாறு, ஆடா தோடை வேர்ச் சாறு, முருங்கையிலைச்சாறு, கண்டங்கத்திரிப் பழம், தேத்தாம்பழம், தேன் 350 கி, சர்க்கரை – 70 கி. |
| செ.மு | : | மேற்குறிப்பிட்ட மருந்துப் பொருட்களை இடித்துச் சாறுகளில் கரைத்து, கண்டங்கத்திரிப் பழம், தேத்தாம் பழம் உடனிட்டு தேன், சர்க்கரை கலந்து லேகியம் கிளறிக் கொள்ளவும். |
| அளவு | : | கழற்சிக்காய் (அ) நெல்லிக்காயளவு |
| தீ.நோ | : | இருமல் |

## இளகம் – 5

தே.பொ : பசும் பால் – 2.6 லி, ஆடாதோடைச் சாறு, காத்தொட்டிச்சாறு, தூதுவளைச்சாறு – தேவையான அளவு, வெள்ளை வெங்காயம் – 600 கி

செ.மு : மேற்குறிப்பிட்ட சாறுகளைப் பசும் பாலில் கலந்து உரித்த வெள்ளை வெங்காயத்தைப் போட்டு லேகியம் செய்து கொள்ளவும்.

அளவு : கழற்சிக்காய் (அ) நெல்லிக்காயளவு

தீ.நோ : வாய்வு, இருமல்.

## இளகம் – 6

தே.பொ : சுக்கு, திப்பிலி, மிளகு, சித்தரத்தை – வகைக்கு 8 கி, ஆடாதோடை இலைச்சாறு – 336 மி.லி. கடுக்காய்த் தூள் சாறு – 336 மி., பசுநெய் – 200 மி.லி.,தேன் – 200 மி.லி., பனங்கருப்பட்டி – எலுமிச்சங்காய் அளவு.

செ.மு : சுக்கு, திப்பிலி, மிளகு, சித்தரத்தை இவற்றை அரைத்து ஆடாதோடைச்சாறு, கடுக்காய்த் தூள் சாறு ஆகியவற்றில் போட்டு, அடுப்பில் ஏற்றி இறுகிவரும் போது பசுநெய், தேன் விட்டு பனங்கருப்பட்டி எலுமிச்சங்காயளவு போட்டு இறுத்து வைத்துக் கொள்ள வேண்டும்.

அளவு : கழற்சிக்காய் (அ) நெல்லிக்காயளவு

தீ.நோ : இருமல்

## இளகம் – 7

தே.பொ : திப்பிலி, சுக்கு, கடுக்காய், அக்கிராகாரம், அரத்தை, ஓமம், சீரகம், தனியா (கொத்துமல்லி) வெட்பாலை அரிசி, செண்பகப்பூ, கோஷ்டம் – இவை வகைக்கு 35 கி; கற்கண்டு–105 கி; தேன், நெய் இவை வகைக்கு 325 கி.

செ.மு : திப்பிலியை இடித்து 325 மி.லி. தண்ணீர் விட்டு எட்டில் ஒரு பங்காகக் காய்ச்சிக் குடிநீராக்கிக் கொள்ளவும். பிறகு மேற்கூறிய சரக்குகளைப் பொடித்துச் சூரணம் செய்து கொள்ளவேண்டும். குடிநீரில் சூரணத்தைக் கலந்து அடுப்பில் வைத்து, தேன் கலந்து கிண்டவும். பிறகு நெய் சேர்த்து, லேகியம் வரும் வரை கிண்டி லேகியமாக்கிக் கொள்ளவும்.

அளவு : கழற்சிக்காய் (அ) நெல்லிக்காயளவு

தீ.நோ : சிலேற்பனம், வாதம், இருமல், வாய்வு, உப்பிசம்.

## இளகம் – 8

தே.பொ : சாதிலிங்கம் – 16 கி, சாதிக்காய், சாதிபத்திரி, கசகசா, வெள்ளை மிளகு, வால்மிளகு, மிளகு, சுக்கு, குங்குமப்பூ, கச்சோலம், அதிமதுரம், கோஷ்டம், – வகைக்குச் சம அளவு, சர்க்கரை – 560 கி, நெய் – 325 மி.லி.

செ.மு : மேற்கூறிய சரக்குகளை எல்லாம் இடித்துப் பொடி செய்து கொள்ள வேண்டும். பொடியுடன் நெய், சர்க்கரையைக் கலந்து அடுப்பேற்றி எரித்து இலேகிய பதம் வரும் வரை கிண்டி இலேகியமாக்கிக் கொள்ளவும்.

அளவு : கழற்சிக்காய் (அ) நெல்லிக்காயளவு

தீ.நோ : பல்வகை நோய்கள்.

## இளகம் – 9

தே.பொ : காத்தொட்டியிலைச் சாறு, கொடுவேலிச்சாறு வேலிப்பருத்திச்சாறு, புங்கனிலைச்சாறு, சங்கனிலைச்சாறு, கோப்பிரண்டைச்சாறு, பிரண்டைச் சாறு – வகைக்கு 672 மி.லி. வெள்வெங்காயம்–8 கி, திப்பிலி–4 கி, கண்டதிப்பிலி–4 கி, ஓமம்–4 கி, பெருங்காயம்

–வகைக்கு 4கி, சுக்கு, மிளகு, இந்துப்பு, வளையலுப்பு, பொட்டிலுப்பு வகைக்கு 24 கி

செ.மு : மேற்கூறிய சரக்குகளை மேலே குறிப்பிட்ட சாற்றில் அரைத்து லேகியம் செய்து சாப்பிடவும்.

அளவு : கழற்சிக்காய் (அ) நெல்லிக்காயளவு

தீ.நோ :

## இளகம் – 10

தே.பொ : தூதுவளைச்சமூலச் சாறு – 325 மி.லி, கருப்பஞ்சாறு –975 மி.லி, மிளகுச்சாறு, தேன் – வகைக்கு 1.3 மி.லி.

செ.மு : மேற்கூறிய சாறுகளைச் சட்டியிலிட்டு வற்றக் காய்ச்சிக் கொள்ளவும். அதில் மிளகைப் பொடி செய்துப் போட்டு தேன் விட்டுக் கிண்டி வைத்துக் கொள்ளவும்.

அளவு : காலை, மாலை கழற்சிக்காயளவு சாப்பிடவும்.

தீ.நோ :

## இளகம் – 11

தே.பொ : தண்ணீர் மீட்டான் கிழங்கு–550 கி., நெருஞ்சி –550 கி., நிலப்பனைக்கிழங்கு–700 கி., சீந்தில் தண்டு –875 கி., சேங்கொட்டை–1.125கி., சித்திரமூலம்–350 கி., எள்–350 கி., நறளைக் கிழங்கு–550 கி., சுக்கு, மிளகு, திப்பிலி –வகைக்கு– 280 கி., சர்க்கரை–250 கி., தேன் – 2.225 கி.கி., பசுநெய்–250 கி.,

செ.மு : தண்ணீர்மீட்டான் கிழங்கு முதல் திப்பிலி வரையுள்ள பொருட்களைக் கூட்டி இடித்துச் சீலையில் வடித்து நெய்யுள்ள கலசத்தில் போட்டு சர்க்கரை, தேன், பசுநெய் இவற்றை விட்டுப் பிசைந்து 15 நாட்கள் தானியத்தில் புடமிட்டுப் பின் லேகியத்தை எடுத்துக் கொள்ளவேண்டும்.

அளவு : சுமார் 2 கி வீதம் காலை, மாலை இருவேளை, 48 நாட்கள்

தீ.நோ : பிரமேகம், பாண்டுரோகம், பீனசம், மூத்திரக் கிரிச்சரம், கிரந்தி, உஷ்ணவாய்வு, ஈளை, இருமல், காசம், வாதம், பித்தம், சிலேத்துமம், ஆண்மலடு, பெண்மலடு.

பத்தியம் : இச்சாபத்தியம்.

### இளகம் – 12

தே.பொ : சாதிக்காய், சாதிபத்திரி, கிராம்பு, அதிமதுரம், கார்போக அரிசி, சுக்கு, திப்பிலி, மிளகு, நெல்லி முள்ளி, கற்கடகசிங்கி, சித்தரத்தை, திப்பிலிமூலம் – வகைக்கு 4 கி, தாளிசபத்திரி – 16 கி, சர்க்கரை – 40 கி, பசுநெய், தேன் – சமவெடை.

செ.மு : மேற்கூறிய சரக்குகளை இடித்து வடிகட்டிச் சூரணம் செய்து கொள்ளவும். பிறகு சர்க்கரையைக் கரைத்துக் கலசத்திலிட்டு அடுப்பேற்றி சரக்குப் பொடியை அதில் சிறுகச் சிறுகத் தூவி, முதலில் தேனை விட்டுப் பிறகு நெய்யை விட்டுக் கிளறிப் பக்குவத்தில் எடுத்து வைத்துக் கொள்ளவும்.

அளவு : புன்னைக்காயளவு

தீ.நோ : மேகம், காங்கை, நீர்க்கடுப்பு, நீர்க்குத்தல், வாய்வு, பொருமல், அக்கினிமாந்தம், கபாலச்சூடு, தாது விருத்தி.

❖❖❖❖❖

# 10. எண்ணெய் வகைகள்

### எண்ணெய் – 1

தே.பொ : கோழி–1, வசம்பு, வெள்ளைப்பூண்டு, நிலவேர், முசுறுமுட்டை, கோழிமுட்டை – வகைக்கு – 35 கி,

நெய், ஆமணக் கெண்ணெய், வேப்பெண்ணெய் – வகைக்கு 1.3 லி

செ.மு : மேற்கூறிய மருந்துப் பொருட்களை எண்ணெய்க் கலவையிலிட்டுக் காய்ச்சி வடிக்கவும். கோழியைச் சுத்தம் செய்து கிழியாகக் கட்டி அவ் வெண்ணெயிலிட்டுக் காய்ச்சிக் கொள்ளவும். இதனைப் பத்திரப்படுத்தவும்.

அளவு : 16 மி.லி. காலை, மாலை

தீ.நோ : வாத சன்னி, தீராத சன்னி

## எண்ணெய் – 2

தே.பொ : எள்ளெண்ணெய் – 325 மி.லி., ஏலம் – 35 கி, கார்போக அரிசி – 35 கி

செ.மு : ஏலத்தையும் கார்போக அரிசியையும் பொடியாக்கவும். அப்பொடியை எள்ளெண்ணெயில் போட்டுக் கலக்கி வெயிலில் வைக்கவும்.

அளவு : அக்கி கண்ட இடமெல்லாம் கோழி இறகால் எடுத்துத் தடவவும்.

தீ.நோ : அக்கி அவிந்து போகும்.

## எண்ணெய் – 3

தே.பொ : பூவரசம் பட்டை, அத்திப்பட்டை, வெள்ளருகுச் சாறு –35 மி.லி., கோவைச்சாறு, சங்கங்குப்பிச்சாறு, சிற்றாமணக்கு எண்ணெய்–4லி, அமுக்கிராக்கிழங்கு, பரங்கிச் சக்கை–வகைக்கு–105 கி., இலவங்கப் பட்டை, கார்போக அரிசி, கடுகுரோகணி, வாய் விளங்கம்–வகைக்கு–35 கி., திப்பிலி, மிளகு–வகைக்கு–17.5கி, பூரம் – 8.5 கி

செ.மு : அமுக்கிராக்கிழங்கு முதல் பூரம் முடிய உள்ள சரக்குகளைத் தூளாக்கவும். மேலே கூறப்பட்டுள்ள சாறு வகைகளைச் சிற்றாமணக்கு எண்ணெயில்

ஊற்றி அடுப்பில் வைத்து எரிக்கவும். கொதிக்கும் போது மேற்படி தூளைப் போட்டுக் கலக்கி வடித்துக் கொள்ளவும்.

அளவு : 17.5 கி வீதம் மூன்று வேளை; ஏழு நாட்கள் விட்டு ஏழு நாட்கள் சாப்பிடவும்.

தீ.நோ : குட்டவிரணம், சட்டை மேகம், படை குட்டம், சொறி.

பத்தியம் : பரங்கிக்காய், முருங்கைக்காய், துவரம் பருப்பு, உப்பு, அரைக்கீரை இவை ஆகும். புளி ஆகாது.

## எண்ணெய் – 4

தே.பொ : சின்னி இலைச்சாறு, அவுரி இலைச்சாறு, கொடிக் கழற்சி இலைச்சாறு, நாவி இலைச்சாறு, காட்டு ஆமணக்கு இலைச்சாறு, கோழி அவரைச்சாறு – வகைக்கு 650 மி.லி.,

கடைச்சரக்கு: பூண்டு – 20 கி, பெருங்காயம் – 4 கி, கருஞ்சீரகம், கஸ்தூரி மஞ்சள், வசம்பு, கார்போக அரிசி, காட்டுச்சீரகம் வகைக்கு – 8 கி, சிற்றாமணக்கு எண்ணெய் – 1.3 லி,

செ.மு : மேற்கூறிய சாறு வகைகளுடன் கடை மருந்துகளையும் கூட்டி எண்ணெய் பதத்தில் காய்ச்சி வடித்து வைத்துக் கொள்ளவும்.

அளவு : வேளைக்கு 25 மி.லி. வீதம் ஆறு நாட்கள்.

தீ.நோ : கரப்பான்

பத்தியம் : உப்பு, புளி, இச்சை, மாமிசம் ஆகாது.

குறிப்பு: *ஏழாம் நாள் ஓமம் தேய்த்து முழுகவும். உப்பு, புளி வறுத்துக் கூட்டவும்.*

## எண்ணெய் – 5

தே.பொ : கழுதைப்பால், நல்லெண்ணெய் – சம எடை.

செ.மு : பாலையும், எண்ணெயையும் கலந்து எரித்து வடித்துக் கொள்ளவும்.

அளவு : 16 மி.லி. அளவு உள்ளுக்குக் கொடுக்கவும்.

தீ.நோ : தீராத வீக்கம்.

பத்தியம் : காரம், புளிப்பு தவிர்க்கவும்.

## எண்ணெய் – 6

தே.பொ : விளக்கெண்ணெய்–தேவையான அளவு, காந்தம், திப்பிலி, நற்சீரகம், கடுகுரோகணி, அத்தித்திப்பிலி, திப்பிலிமூலம், கருஞ்சீரகம், இந்துப்பு, சீனக்காரம், பெருங்காயம், நவச்சாரம், சுக்கு, மிளகு, ஓமம், இரசம் – வகைக்குச் சம எடை

செ.மு : இரசம் தவிர, மேற்கூறிய பொருட்களைச் சம அளவு எடுத்துத் தண்ணீர் விட்டு அரைத்துக் கொள்ளவும். ஒரு சட்டியில் இரசத்தை விட்டு அதில் விளக்கெண்ணெயையும் விட்டு, தண்டு சிவந்த ஆமணக்கின் தண்ணீரைச் சேர்த்துக் கரண்டி கொண்டு மத்திக்கவும். இரசம் முறிந்தவுடன் மற்ற மருந்துகளின் அரைத்த விழுதைக் கலந்து அடுப்பில் வைத்து ஒரு உள்ளங்கை அளவு விளக்கெண்ணெய் விட்டுக் கிண்டி பதத்தில் இறக்கி கலசத்தில் இட்டுக் கொள்ளவும்.

அளவு : நாளொன்றுக்கு 4.4 கி சாப்பிடவும்.

தீ.நோ : குன்மம், வலி குன்மம், சத்தி குன்மம்.

பத்தியம் : காரம், புளிப்பு தவிர்க்கவும். வெள்ளாட்டுப் பால் கூட்டவும்.

## எண்ணெய் – 7

தே.பொ : நல்லெண்ணெய், வெள்ளாட்டுக் கோமியம், வில்வ இலைச் சாறு, கடுகு – வகைக்கு 670 மி.லி.

செ.மு : மேற்கூறிய பொருட்களைக் கூட்டி எரித்து வைத்துக் கொள்ளவும்.

அளவு : ஓரிரு துளிகள், பல தடவை காதில் விடவும்.

தீ.நோ : செவிடு நீங்கும்

## எண்ணெய் – 8

தே.பொ : நாகநந்தி கட்டி, நெய்–1.3 லி, தண்ணீர் – 21.5 லி. எருமைப்பால், சுக்கு, சிவதை வேர், கொடுவேலி வேர், அழிஞ்சி வேர், கொன்றை வேர்–தேவையான அளவு. பஞ்சதிரவியம், சிவதை, கடுக்காய், மருளூமத்தை, நேர்வாளம், வாலுளுவை – வகைக்கு 18 கி.

செ.மு : நாகநந்தி கட்டியுடன் வேர் வகைகளையும் சேர்த்து இடித்து 21.5 லி. தண்ணீர் விட்டு நான்கிலொன்றாக வற்றக் காய்ச்சிக் கொள்ள வேண்டும். பிறகு மற்ற பொருட்களைச் சேர்த்து எருமைப்பால் விட்டு சுக்கைச் சேர்த்தெரித்து வடித்து வைத்துக் கொள்ளவும்.

அளவு : 13 கி, நாளொன்றுக்குச் சாப்பிடவும்.

தீ.நோ : அஷ்டதிரி சூலை, குன்மம், வாதம்.

குறிப்பு: *கனையா எருமைப்பால் – இளங்கன்று உடைய எருமையின் பால் நல்லது.*

## எண்ணெய் – 9

தே.பொ : கருஞ்சீரகம், கஸ்தூரி மஞ்சள், கடுக்காய் – வகைக்கு 5200 கி, அழிஞ்சிப்பட்டை, குமிளம் பழச்சாறு, கண்டங்கத்திரிவேர், குட்டிவிளாவேர், – வகைக்குச் சமவெடை.

செ.மு : மேற்கூறிய பொருட்களை இடித்து வேப் பெண்ணெயில் காய்ச்சிப் பதத்தில் வடித்து வைத்துக் கொள்ளவும்.

அளவு : ஒரு வேளைக்கு 8 கி வீதம் கொடுக்கவும்.

தீ.நோ : வறட்கணை.

பத்தியம் : புளி, புகையிலை, பழைய சாதம் ஆகாது.

## எண்ணெய் – 10

தே.பொ : பூண்டு, கொல்லங்கோவைக்கிழங்கு, மிளகு வகைக்கு – 20 கி, கொடிவேலி வேர், சங்கன்வேர், வெட்பாலை வேர் வகைக்கு–11 கி, வேப்பெண்ணெய் – 1.3 லி.

செ.மு : மேற்படி சரக்குகளைச் சேர்த்தரைத்து வேப்பெண்ணெய் 1.3 லி விட்டு மெழுகு பதமாய்க் காய்ச்சி வடித்துக் கொள்ள வேண்டும்.

அளவு : 25 மி.லி. வீதம் 3 நாட்கள் காலையில் மட்டும்.

தீ.நோ : எலிக்கடி, படுவன்.

பத்தியம் : கல்லுப்பு வறுத்துக் கூட்டவும். ஏழாம் நாள் ஓமத்தை வடிகஞ்சியில் தேய்த்து முழுகவும். மறுநாள் புளி சேர்த்துக் கொள்ளவும்.

## எண்ணெய் – 11

தே.பொ : கமுகஞ்சாறு, கருஞ்சீரகம், நாய்வேளைச் சாறு, கஸ்தூரி மஞ்சள், கரிப்பான் சாறு, குட்டிவிளா வேர், தூதுவளை வேர், சாரணை வேர், கடுக்காய், ஈரவெங்காயம்–வகைக்கு 350 கி, வேப்பெண்ணெய், விளக்கெண்ணெய் – தேவையான அளவு.

செ.மு : மேலே உள்ளவற்றைப் பெரிய பிள்ளைகள் என்றால் வேப்பெண்ணெயிலும், சிறிய பிள்ளைகள் என்றால் விளக்கெண்ணெயிலும் அரைத்துக் கொள்ளவும்.

அளவு : நோயின் தன்மை, நோயாளியின் வன்மை அறிந்து குடிக்கவும்.

தீ.நோ : இழு கணை

## எண்ணெய் – 12

தே.பொ : சங்க வேர், சாரணை வேர், கார்த்திகைக் கிழங்கு, கொடிவேலி வேர், திருகுகள்ளி வேர், புங்கம் வேர்,

சங்கங்குப்பி வேர், நெய்க்காயா வேர், வெள்ளுள்ளி, பூதகரப்பான்பட்டை, கௌரி பாசாணம், ஆயிலம் பட்டை, சுடுதுரத்தி எனும் சித்திரப் பாலாடை வேர், காட்டாமணக்கு வேர், சதுரக்கள்ளி வேர், எருக்கம் வேர், வெள்ளருகு வேர், காஞ்சிரையிலை, மிளகு, வசம்பு, நிர்விஷம், வெள்ளைப் பாசாணம், செவ்வள்ளிக் கொடி, இலவங்கப்பட்டை, சுக்கு, திப்பிலி, கண்டதிப்பிலி, கருஞ்சீரகம், நேர்வாளம், நீர்வெட்டிமுத்து, வெண் காரம், எருக்கம்பால், பேய்ப்பீர்க்கன்விரை தேவையான அளவு, நல்லெண்ணெய் வேப்பெண்ணெய் வேண்டிய அளவு.

செ.மு : மேற்குறிப்பிட்டவற்றை அரைத்து வேப்பெண்ணெய் அல்லது நல்லெண்ணெய் கலந்து கொள்ளவும். இதனுடன் ஆடுதின்னாப் பாளைவேர், இலை, விஷமல்லி வேர் கூட்டவும்.

அளவு : தேவையான அளவு

தீ.நோ : மண்டை வியாதி, தலைப்புற்று, கபாலக்குட்டம், கபாலப் புற்று, சூலை, மண்டைக்கரப்பான்.

பத்தியம் : அன்றைக்கன்று பத்தியமிருக்கவும்.

குறிப்பு: *கூட்டிய எண்ணெயைத் தலையில் தேய்த்து மாலையில் மருக்காரைவேர் அரைத்து முழுகவும்.*

## எண்ணெய் – 13

தே.பொ : அரிதாரம், மனோசிலை, கெந்தகம், துத்தம், துருசு சம அளவு எலுமிச்சம் பழச்சாறு 170 மி.லி. சாதிலிங்கம்.

செ.மு : மேற்குறிப்பிட்டவற்றுடன் நல்லெண்ணெய் கூட்டி வைத்துக் கொள்ளவும்.

அளவு : தேவையான அளவு தேய்த்துக் கொள்ளவும். 25 மி.லி. சாப்பிடவும்.

தீ.நோ : சகல கடிவிஷம், சூலைவாதம், சூலைக்கடுப்பு.

## எண்ணெய் – 14

தே.பொ : வெள்ளை வெங்காயம் – 100 கி, தைவேளை இலை, தைவேளைக் கிழங்கு, குப்பைமேனி இலை ஒரு கைப்பிடி.

செ.மு : வெள்ளை வெங்காயம், தைவேளை இலை, கிழங்கு, குப்பை மேனி இலை இவற்றை அரைத்துப் பொட்டணம் கட்டி விளக்கில் வாட்டி தயிலமிறக்கிக் கொள்ளவும்.

அளவு : தேவையான அளவு உள்ளுக்குக் கொடுக்கவும். ஒரு பக்கமாக எண்ணெயைத் தேய்த்து விடவும்.

தீ.நோ : பாரிச வாய்வு

## எண்ணெய் – 15

தே.பொ : வெள்ளுள்ளி, தேற்றான் விதை, நல்லெண்ணெய் வேண்டிய அளவு.

செ.மு : வெள்ளுள்ளியையும், தேற்றான் விதையையும் அரைத்து நல்லெண்ணெயில் குழப்பிக் கொள்ளவும்.

அளவு : உள்ளுக்குக் கொடுக்கவும்.

தீ.நோ : வெள்ளோக்காளம், விக்கல்.

## எண்ணெய் – 16

தே.பொ : சிற்றாமணக்கெண்ணெய் – 1. 3 லி, தாளி வேர் – ஒரு கைப்பிடி

செ.மு : மேற்கூறிய எண்ணெயில் வேரைப் போட்டுக் காய்ச்சவும். அந்த வேர் உடையும் பக்குவத்தில் எண்ணெயை இறக்கி வைத்துக் கொள்ளவும்.

அளவு : 35 கி வீதம் மூன்று நாட்கள் (ஒவ்வொரு மாதமும்) காலையில் மட்டும் சாப்பிடவும்.

தீ.நோ : கணச்சூடு, கொர்ப்பத்தில் உள்ள சிசுவுக்கு எந்த வியாதியும் அணுகாது.

குறிப்பு: *எண்ணெய் சாப்பிட்ட உடனே பழைய சோறு சாப்பிடவும்.*

## எண்ணெய் – 17

தே.பொ : வாழைக்கிழங்கு, சீந்திற் கொடி, பொன்னாங்காணி, நன்னாரி வேர், ஆவிரை வேர், வறட்பூலா வேர், அத்திப்பட்டை, அரசம்பட்டை.

கடை மருந்து : கற்கடகசிங்கி, தான்றிக்காய், மாதுளை ஓடு, ஏலரிசி, கிராம்பு, சாதிக்காய், களிப்பாக்கு, நற்சீரகம், கருஞ் சீரகம், சுக்கு, இளகணிக்காய், குதம்பைச்சாறு, பாளைச்சாறு, இளநீர், பசுநெய், சர்க்கரை.

செ.மு : வாழைக்கிழங்கு முதல் அரசம்பட்டை வரையுள்ள பொருட்களை நறுக்கி 2.6 லி தண்ணீருள்ள பாத்திரத்திலிட்டு வேக வைத்துக் கொள்ளவும். இக்குடிநீருடன் மேற் குறிப்பிட்டுள்ள கற்கடகசிங்கி முதல் சுக்கு வரையுள்ள மருந்துப் பொருட்களைக் குதம்பை, பாளைச் சாறுகளிலரைத்துச் சேர்க்கவும். வன்னிவேரை, விளாங்காயளவு அரைத்துக் கலக்கவும். இளநீர், 1.3 லி சமஅளவு பசுநெய், சர்க்கரை கூட்டி எண்ணெயாய்க் காய்ச்சிக் கொள்ளவும்.

அளவு : அந்தி, சந்தி.

தீ.நோ : கெந்ததாளி எனும் குழந்தைகளின் வாய் விரண நோய், மூலக்கிராணி, வறட்சி, உஷ்ணம், சகலகணைகள், உள்வெக்கை.

பத்தியம் : இச்சாபத்தியம்.

குறிப்பு: *உடல், வாய் வெந்து போனால் வெள்வேல் வேரை அரைத்து எலுமிச்சங்காயளவு பசும்பாலில் கலந்து சாப்பிடவும்.*

## எண்ணெய் – 18

தே.பொ : கழற்சிக்காய் பருப்பு, வால் மிளகு, சன்னலவங்கப் பட்டை, சுத்தி செய்த நேர்வாளம், ஏலம், பரங்கிச் சக்கை, பூரம், கடுகுரோகணி – இவை வகைக்கு

17 கி, கழற்சிக்காய் சமூலம் – 350 கி, சிற்றாமணக்கெண்ணெய் – 325 மி.லி.

செ.மு : மேற்கூறிய மருந்துப் பொருட்களை இடித்துச் சூரணம் செய்து வைத்துக் கொள்ளவும். கழற்சிக்காய், சமூலத்தைப் பஞ்சு போல் இடித்துக் கொள்ளவும். இதனுடன் 1.3 லி தண்ணீர் விட்டு 325 மி. லிட்டராக வற்றக் காய்ச்சி வடிகட்டிக் கொள்ளவும். 325 மி.லி. சிற்றாமணக்கெண்ணெய் விட்டு மேற்படி தூளைக் கூடப் போட்டுக் கலக்கி அடுப்பில் வைத்து இரண்டு விறகு கொண்டு எரித்துப் பதமாகக் காய்ச்சி வைத்துக் கொள்ளவும்.

அளவு : 16 மி.லி வீதம் காலையில் மட்டும் ஏழு நாட்கள் சாப்பிடவும்.

தீ.நோ : விரை வாதம்

பத்தியம் : உப்பு வறுத்துக் கூட்டவும்.

## எண்ணெய் – 19

தே.பொ : மிளகரணை இலைச்சாறு – 420 கி, சிற்றாமணக் கெண்ணெய் – 420 கி, பூண்டுப்பல் – தேவையான அளவு

செ.மு : மிளகரணை இலையைத் தண்ணீர் விட்டு உரலில் இடித்துச் சாறு பிழிந்து கொள்ளவும். அதில் 420 கி, சிற்றாமணக்கெண்ணெய் விட்டு உரித்த பூண்டைச் சேர்த்துக் காய்ச்சி வடித்துக் கொள்ளவும்.

அளவு : தக்க அளவுப்படி, மூன்று நாட்கள்.

தீ.நோ : விரைவீக்கம், நரம்புநோய், பக்கச்சூலை, கெர்ப்பச் சூலை.

பத்தியம் : இச்சாபத்தியம்.

குறிப்பு: *எண்ணெய் கொடுத்து வரும் போது பேதியாகும். பேதி அதிகமானால் நோய் நீங்கினதென்று தெரிந்து கொண்டு எண்ணெயை நிறுத்தி விடவும்.*

## எண்ணெய் – 20

தே.பொ : சிற்றாமணக்கெண்ணெய்–5.2 லி, நெல்–5.2 கி.கி., இளநீர்–2.6 லி, மான்செவி இலைச்சாறு–675 மி.லி

செ.மு : நெல்லை இளநீரில் அவித்து உலர்த்தி நெல்லைத் தனியாக எடுத்துக் கொள்ள வேண்டும். சிற்றாமணக்கெண்ணெய் ஊற்றி, வாய் பேசாமல் மான்செவிச்சாறு 675 மி.லி. கூட விட்டு மூன்று நாள் சூரியபுடம் இட வேண்டும்.

அளவு : காலை, மாலை மூன்று நாட்கள்

தீ.நோ : வெட்டை

பத்தியம் : ஆறு நாட்கள்

குறிப்பு: *அவித்துத் தனியாக எடுத்து வைத்த நெல்லின் அரிசியைச் சமைத்துச் சாப்பிடவும்.*

## எண்ணெய் – 21

தே.பொ : நாகதாளி, மேகதாளி, ஏகதாளி, பெருங்குறிஞ்சா, பெருமருந்து, ஆற்றுக்குமட்டி, எருக்கன்வேர், கொடிவேலிவேர் – இவை வகைக்கு 105 கி, எட்டிப்பட்டை, துருசிப்பட்டை, கடப்பம்பட்டை, பிராயம்பட்டை, பேய்ப்பீர்க்கம் விரை, நாகக்கட்டிப் பட்டை, சிவனார்வேம்பு, உபாயப்பட்டை, புரசம்பட்டை, சேங்கொட்டை, எட்டிவிதை, வெள்ளாட்டுப் புழுக்கை வகைக்கு– 100 எண்ணிக்கை

செ.மு : மேற்கூறிய கடைச் சரக்குகளை இடித்துத் தூளாக்கி மண் பானையில் விட்டு அதன் மேல் ஆடுதின்னாப்பாலை, நொச்சித் தழை இவ்விரண்டும் சேர்த்து அமுக்கி மூடி சட்டியைக் கவிழ்த்து சீலை மண் செய்து 5 கூடை காட்டெருவில் எரித்துப் பாதாளத் தைலமிறக்கவும்.

அளவு : ஒரு நாளுக்கு 4.4 கி. வீதம், 30 நாட்கள்.

தீ.நோ : வண்டுகடி, வாதகுட்டம், குன்மம், கடிவிடம்.

பத்தியம் : முருங்கை, துவரை கூட்டவும்.

## எண்ணெய் – 22

தே.பொ : இரசகற்பூரம் – 8 கி, சேங்கொட்டை – 120 கி கொடிவேலி வேர் – 80 கி, நல்லெண்ணெய் – 40 மி.லி., பசுவின் பால் – 40 மி.லி., பசு மோர் – 40 மி.லி.

செ.மு : சேங்கொட்டையைப் பசும்பாலில் அவித்து மோரிலே ஒரு முறை அவிக்கவும். பின் சேங்கொட்டையின் நுனிப்பகுதியை வெட்டி விட வேண்டும். பிறகு அக்கொட்டையைச் சட்டியில் வறுத்துப் பதத்தில் எண்ணெயை ஊற்றிக் கொதிக்க விடவேண்டும். கொதிக்கும் போது, பசும்பால் ஊற்றி அரைத்த கொடி வேலி விழுதை மீதமுள்ள பாலிலே அப்படியே குழப்பி கொதிக்கிற எண்ணெயில் ஊற்றி, மெழுகு பதம் வருகிறபோது பூரம் பொடி செய்து போட்டுக் காய்ச்சி எண்ணெய் வடித்துக் கொள்ள வேண்டும்.

அளவு : 12 கி, 7 பொழுது

தீ.நோ : எல்லாவகைக் கிரந்தி நோய்கள்

பத்தியம் : உப்பு வறுத்துக் கூட்டவும்.

## எண்ணெய் – 23

தே.பொ : ஆவாரங்கம்பு (குச்சி)

செ.மு : ஆவாரங்கம்பினைச் சிறு துண்டுகளாக நறுக்கிப் பானையில் போட்டு, பானையில் துவாரமிட்டுக் கீழே குடுவை வைத்துக் குழியில் புதைத்து எரித்துக் குழித்தைலமாக இறக்கிக் கொள்ளவும். கீழ்வடியும் தைலத்தை எடுத்துப் பத்திரப் படுத்தவும்.

அளவு : 16 மி.லி.

தீ.நோ : நீரிழிவு

## எண்ணெய் – 24

தே.பொ : சுக்கு, திப்பிலி, கண்டதிப்பிலி, அரத்தை வகைக்கு – 350 கி, கோஷ்டம், அக்கிராகாரம், சாதிலிங்கம், பொன்னரிதாரம், கறட்டு அரிதாரம், மனோசிலை, ஊசிக்காந்தம், நெல்லிக்காய்க் கெந்தகம், வாண்கெந்தகம் வகைக்கு – 25 கி, வெள்ளைப் பாசாணம், கௌரிப்பாசாணம், நாபிக்கிழங்கு, குதிரைப்பல் பாசாணம் வகைக்கு – 8 கி, வேப்பெண்ணெய் – 1.3 லி, கொடிவேலிவேர், சங்கம் வேர், எருக்கம் வேர், குப்பைமேனி வேர், வேலிப்பருத்தி வேர், அகிலம்பட்டை, காட்டாமணக்கு வேர், பெருமரத்து வேர், மாவிலங்கம்வேர், முருங்கை வேர், சதுரக்கள்ளி வேர், திருகுகள்ளி, ஆடாதோடை.

செ.மு : மேற்கூறிய சரக்குகளை, பாடாணங்களை முறைப்படி சுத்தி செய்து சேர்த்தரைத்து வேப்பெண்ணெயில் போட்டுக் காய்ச்சி பதத்தில் வரும்போது இறக்கி வடித்துக் கொள்ள வேண்டும்.

அளவு : காலை, மாலை, மூன்று நாட்கள்

தீ.நோ : சன்னி பதினெட்டும்

பத்தியம் : உப்பு, புளி, புகையிலை நீக்கவும்.

## எண்ணெய் – 25

தே.பொ : வெள்ளுள்ளிச்சாறு
சிற்றாமணக்கெண்ணெய் – வகைக்கு 3.9லி

செ.மு : வெள்ளுள்ளிச் சாற்றில் சிற்றாமணக் கெண்ணெய் கலந்து காய்ச்சிக் கொள்ள வேண்டும். அதனுடன் பெருங்காயத்தைப் பொடித்துச் சேர்த்துக் கொள்ளவும்.

அளவு : 16 மி.லி.

தீ.நோ : எட்டுவகைக் குன்மம்.

## எண்ணெய் – 26

தே.பொ : இரசம், கெந்தகம் வகைக்கு–175 கி, சேங்கொட்டை –8, சவுரிக்கொடி – 2600 கி, வெள்ளைப் பாசாணம், மனோசிலை, சாதிலிங்கம் வகைக்கு – 35 கி.

செ.மு : மேற்கூறிய சரக்குகளைப் பசு நெய் விட்டு அரைத்துச் சீலையிலுருட்டி இரும்புக் கம்பியில் அச்சீலையைச் சுற்றி தீயிட்டு எரியச் செய்து தயிலம் வடிக்கவும்.

அளவு : 8 கி வீதம் பதினொரு நாட்கள்.

தீ.நோ : சகல குட்டம்

பத்தியம் : கடும் பத்தியம்.

குறிப்பு: *பதிமூன்றாம் நாள் தலைக்குத் தண்ணீர் விடவும்.*

## எண்ணெய் – 27

தே.பொ : வெள்ளெலி, கொடிவேலி வேர்

செ.மு : வெள்ளெலி உரித்து கால்கள், குடல் நீக்கி விட வேண்டும். கொடிவேலி வேரை நெல்லிக்காயளவு அரைத்து எலி வயிற்றில் வைத்து தைத்து நல்லெண்ணெயில் வேக வைத்துக் கொள்ள வேண்டும்.

அளவு : 16 மி.லி. மூன்று நாட்கள் காலையில் மட்டும், கறியும் சாப்பிடவும்.

தீ.நோ : மூலம் (கூட்டோடே விழும்)

## எண்ணெய் – 28

தே.பொ : தைவேளைச்சாறு, நல்லெண்ணெய் – சம அளவு

செ.மு : இவை இரண்டையும் சமமாய்க் கூட்டிக் காய்ச்சவும்.

அளவு : ஓரிரு துளிகள் காதில் விடவும்.

தீ.நோ : காதிரைச்சல்.

## எண்ணெய் – 29

தே.பொ : கிருஷ்ண துளசி இலை

செ.மு : கிருஷ்ண துளசி இலையைக் கசக்கிப் பிழிந்து சாறெடுத்துக் கொள்ளவும்.

அளவு : இரண்டு துளி கண்ணில் விடவும், மூன்று நாட்கள்.

தீ.நோ : மாலைக்கண் நோய்.

## எண்ணெய் – 30

தே.பொ : பசலை இலை, தேன்.

செ.மு : பசலை இலையைத் தேனுடன் கலந்து காய்ச்சி எடுத்துக் கொள்ளவும்.

அளவு : ஓரிரு துளிகள் காதில் இடவும்.

தீ.நோ : காது செவிடு நீங்கும்

## எண்ணெய் – 31

தே.பொ : கீழ்க்காய் நெல்லி சமூலம், நல்லெண்ணெய் – 2.6 லி, சர்க்கரை – 175 கி

செ.மு : கீழ்க்காய்நெல்லி சமூலத்தை இடித்துப் பொடி செய்து கொள்ளவும். அப்பொடியில் 21.5 லி தண்ணீர் ஊற்றி எரித்து எட்டிலொன்றாக வற்ற வைத்துக் குடிநீராக்கவும். அதன் பின் அக்குடிநீரில் நல்லெண்ணெய், சர்க்கரை போட்டுக் காய்ச்சி மெழுகு பதத்தில் இறக்கி வைத்துக் கொள்ளவும்.

அளவு : 16 மி.லி. இருவேளை

தீ.நோ : பித்தநோய்கள், ஈரல் நோய்கள்.

❖❖❖❖❖

# 11. மாத்திரை வகைகள்

## மாத்திரை – 1

தே.பொ : கற்றாழைச்சோறு – வேண்டிய அளவு, அதிமதுரம் பொரித்த வெங்காரம், வெள்ளை மிளகு – வகைக்கு 12 கி.

செ.மு : மேற்கூறிய கடைச்சரக்குடன் கற்றாழைச் சோறு சேர்த்தரைக்கவும். அரைத்த விழுதை மிளகளவு மாத்திரைகளாகச் செய்து கொள்ளவும்.

அளவு : இரண்டு மாத்திரை வாயில் அடக்கவும்.

தீ.நோ : இருமல்.

## மாத்திரை – 2

தே.பொ : வெள்ளைப் பாடாணம் – 35 கி, கௌரிப் பாடாணம் – 35 கி, மிளகு – 160 கி, இரசம்–35 கி, ஊமத்தஞ் சாறு, வாகைச்சாறு – தேவையான அளவு.

செ.மு : முன் உள்ள மூன்றையும் தண்ணீரில் மூன்று மணி நேரம் வேக விடவும். பின் அதைக் கழுவி எடுத்து அதனுடன் 35 கி இரசம் கூடவிட்டு, ஊமத்தஞ்சாறு விட்டு ஆறு மணி நேரம் அரைக்கவும். பின் அதில் வாகைச் சாறு விட்டு ஆறு மணி நேரம் அரைக்கவும். அரைத்த விழுதை 50 மி.கி. அளவு உருண்டைகளாகச் செய்து வைத்துக் கொள்ளவும்.

அளவு : இரண்டு உருண்டை

து. ம. : காடி, இளநீர்

தீ.நோ : சுரம் ஒன்பதும் தீரும்.

பத்தியம் : புளி தவிர்க்கவும்.

*குறிப்பு: வாதசுரம் மூன்றுக்கும் பித்தசுரம் மூன்றுக்கும் காடியில் கொடுக்கவும். கபால சுரத்துக்கு இளநீரில் கொடுக்கவும்.*

## மாத்திரை – 3

தே.பொ : இரச கற்பூரம் – 4 கி, வேப்பங்கொழுந்து – ஒரு பிடி.

செ.மு : இரச கற்பூரத்தைத் தாய்ப்பாலில் ஏழு நாட்கள் ஊற வைக்கவும். பின்பு அதை எடுத்து அதனுடன் வேப்பங்கொழுந்தைச் சேர்த்து அரைக்கவும். பிறகு அரைத்த விழுதை பத்து உருண்டைகளாய்ச் செய்து கொள்ளவும்.

அளவு : இருவேளை, ஒன்பது நாட்கள்.

து.ம : அனுபானமறிந்து கொடுக்கவும்.

தீ.நோ : மாதவிடாய் உண்டாகும்.

பத்தியம் : கோழிக்கறி, ஆட்டுக்கறி, உப்புக் கண்டம் ஆகும். புளி தள்ளவும். வென்னீர் கொடுக்கவும்.

## மாத்திரை – 4

தே.பொ : கற்பூரம் – 135 மி.கி. பெருங்காயம் – 405 மி.கி. சாராயம் – துளி (சிறிது), வேலாங்கொழுந்து – 6

செ.மு : இவற்றை அரைத்து 60 மி.கி அளவுள்ள மாத்திரையாக உருட்டி வைத்துக் கொள்ளவும்.

அளவு : நாளொன்றுக்கு மூன்று மாத்திரை.

து. ம. : அனுபானமறிந்து கொடுக்கவும்.

தீ.நோ : காக்கை வலிப்பு, விக்கல்.

## மாத்திரை – 5

தே.பொ : வீரம் , இரசம், இலிங்கம், பொரிகாரம் வகைக்கு – 4 கி, திப்பிலி – 14 கி.

செ.மு : இச்சரக்குகளைப் பசும்பால் விட்டரைக்கவும். பின் 65 மி.கி அளவுள்ள மாத்திரைகளாகச் செய்து வைத்துக் கொள்ளவும்.

அளவு : ஒரு மாத்திரை

து. ம. : இஞ்சி சுரசம்

தீ.நோ : சகல சுரம்.

பத்தியம் : சுட்ட புளி, வறுத்த உப்பு கூட்டவும்.

## மாத்திரை – 6

தே.பொ : நவச்சாரம் – 35 கி, கொடிக்கள்ளிப்பால் – தேவையான அளவு, விளக்கெண்ணெய் – மூன்று துளி.

செ.மு : நவச்சாரத்தைக் கல்வத்தில் போட்டு அதில் கொடிக்கள்ளிப்பாலும், விளக்கெண்ணையும் விட்டு மூன்று மணி நேரம் அரைக்கவும். அரைத்ததை 135 மி.கி. அளவு மாத்திரைகளாச் செய்து கொள்ளவும்.

அளவு : ஒரு மாத்திரை ஒரு வேளை.

து. ம. : பழைய வெல்லம், கூழ்.

தீ.நோ : மலக்கட்டு, நீர்க்கட்டு.

குறிப்பு: *பேதி அதிகமானால் எலுமிச்சம் பழச்சாறு குடிக்கவும். குளித்து விட்டு மோர் சாதம் சாப்பிடவும். மாலையில் மிளகுக் குடிநீர் குடிக்கவும்.*

## மாத்திரை – 7

தே.பொ : வேலிப்பருத்தி, நொச்சி, தழுதாழை, பொடுதலை, முருங்கை இலை, குப்பைமேனி இலை, – இவற்றின் சாறு வகைக்குச் சம எடை, வசம்பு, வெந்தயம், சுக்கு, சாரணைவேர், முருங்கைவேர், அதவிடையம், சாதிக்காய், காசுக்கட்டி, இலவம்பிசின் – வகைக்குச் சம எடை.

செ.மு : மேற்கூறிய பொருட்களை மேற் குறிப்பிட்ட சாறுகளை விட்டு அரைத்து எடுத்துக் கொள்ளவும். தூதுவிளங்காய் அளவு உருண்டை செய்து கொள்ளவும்.

அளவு : ஒரு உருண்டை

து. ம. : பால், எருமைத் தயிர் அல்லது தயிர்த் தெளிவிலாவது கொடுக்கவும்.

தீ.நோ : கட்டு மாந்தம்.

## மாத்திரை – 8

தே.பொ : கடுக்காய்விதை, சுக்கு, அசமதாகம், கடலைப்பருப்பு – வகைக்கு 8 கி

செ.மு : மேற்கூறிய பொருட்களை நல்லெண்ணெயில் கறுக்கலாகப் பொரித்துப் பின் பொடித்து உருண்டை செய்து கொள்ளவும்.

அளவு : மூன்று நாட்கள்.

தீ.நோ : கிராணி, மூலக்கிராணி, சீழும் இரத்தமும் விழுவது நிற்கும்.

பத்தியம் : வாழைக்காய், வாழைப்பூ சேர்க்கவும்.

## மாத்திரை – 9

தே.பொ : கோவைப் பழம் – 10, மிளகு – 15

செ.மு : மேற்கூறிய இரண்டையும் அரைத்து உருண்டை செய்து கொள்ளவும்.

அளவு : தேவையான அளவு

து. ம. : தாய்ப்பாலில் மாத்திரையை உரைத்துக் கண்ணில் இடவும்.

தீ.நோ : தேள் விடம்.

## மாத்திரை – 10

தே.பொ : சாதிக்காய், சுக்கு, மிளகு, திப்பிலி, கடுக்காய், தான்றிக்காய், நெல்லிவற்றல், சந்தனம், கொத்துமல்லி, சீரகம், ஏலம், பத்திரி, இலவங்கப்பட்டை, கர்ச்சூரக்காய், திராட்சை, அகத்தி, முசுமுசுக்கை,

தக்கோலம், அதிமதுரம், அசுவகெந்தி வகைக்குச் சமவெடை, சர்க்கரை – தேவையான அளவு.

செ.மு : மேற்கூறிய சரக்குகளைப் பொடித்துச் சூரணம் செய்து கொள்ளவும். அதற்குச் சமஎடை சர்க்கரைப் பாகு சேர்த்து மாத்திரை செய்து கொள்ளவும்.

அளவு : இலந்தைக்காய் அளவு.

தீ.நோ : சகல சுரங்கள், பித்த நோய், சுவாசம், இருமல், சயம், பாண்டு, காமாலை, பிரமேகம்.

பத்தியம் : பத்தியம் இருக்கவும்.

## மாத்திரை – 11

தே.பொ : சீரகம், பூண்டு, தாளிசபத்திரி, கடுக்காய், கருஞ்சீரகம் – வகைக்கு 20 கி, மிளகு, பனை வெல்லம், சங்கவேர், சிவனார் வேம்பு, பொடுதலை, வெள்ளருகு, பிராயவேர் வகைக்கு – 40 கி.

செ.மு : இவை எல்லாவற்றையும் இடித்துச் சேர்த்து வெள்ளாட்டுப் பாலில் பிசறி 2.2 கி அளவிற்கு மாத்திரை செய்து வைத்துக் கொள்ளவும்.

அளவு : ஒன்பது நாட்கள் சாப்பிட்டு பதினோராம் நாள் தலைக்குத் தண்ணீர் விடவும்.

தீ.நோ :

பத்தியம் : பழைய சாதம், செம்மறி ஆட்டுக்கறி, கருவாடு, பரங்கிக்காய், குறும்பாடு எனும் காடு, மலை நாடுகளில் வாழும் ஆடு நீக்கவும்.

## மாத்திரை – 12

தே.பொ : சாதிலிங்கம், சுத்தி செய்த வாளம், இஞ்சியிலை.

செ.மு : சாதிலிங்கம், வாளம் சமன் சேர்த்து இஞ்சி இலைச் சாற்றில் அரைத்து 16 மி.கி. அளவு உருட்டி உலர்த்திக் கொள்ள வேண்டும்.

அளவு : ஒரு மாத்திரை.

து. ம. : இஞ்சிச்சாறு

தீ.நோ : சுரம்

## மாத்திரை – 13

தே.பொ : பாகலிலைச் சாறு – தேவையான அளவு, இரசம், சாதிலிங்கம், பெருங்காயம், கொடிவேலி வேர், புளியறணைக்கிழங்கு வகைக்கு – 4கி, வெங்காரம் – 12கி, கெந்தகம்–8 கி, ஆமணக்கம் வித்து – 35 கி, கோழி முட்டை ஓடு.

செ.மு : மேற்கூறிய பொருட்களை முறைப்படி சுத்தித்துச் சேர்த்து பாகலிலைச் சாறூற்றி அரைத்து 400 மி.கி. அளவு உருட்டி உலர்த்திக் கொள்ள வேண்டும்.

அளவு : ஒரு மாத்திரை

து. ம. : இஞ்சிச்சாறு, நொச்சிச்சாறு.

தீ.நோ : பதின்மூன்று வகை சன்னி, பதின்மூன்று வகை தோஷம்.

## மாத்திரை – 14

தே.பொ : பசும்பால் – 250 மி.லி. இரசம் – 25 மி.கி. நேர்வாளம் – 70 மி.கி. கிராம்பு – 35 மி.கி. மடல்துத்தம் – 25 மி.கி.

செ.மு : மேல் உள்ளவற்றைச் சேர்த்து கஞ்சாயிலைச் சாற்றில் இரண்டு நாள், ஆறு மணி நேரம் அரைத்து 130 மி .கி. அளவு உருட்டிக் கொள்ளவும்.

அளவு : ஒரு மாத்திரை

து. ம. : பாக்கு வெற்றிலை

தீ.நோ : குளிர் சுரம்.

பத்தியம் : முருங்கையிலை நீக்கவும்.

## மாத்திரை – 15

தே.பொ : நேர்வாளம், வளையலுப்பு, கடுகுரோகணி – வகைக்கு 20 கி, குமரிச்சாறு – தேவையான அளவு.

செ.மு : வாளம், வளையலுப்பு, கடுகுரோகணி, இவற்றைக் கல்வத்திலிட்டு, குமரிச்சாறு விட்டு பனிரெண்டு மணி நேரம் அரைத்து தூதுவளங்காய் அளவு மாத்திரை செய்து செப்பில் வைத்துக் கொள்ளவும்.

அளவு : ஒரு மாத்திரை.

தீ.நோ : வயிற்றுப் பிணிகள், வயிற்றுப் பூச்சி. பேதியாகும்.

## மாத்திரை – 16

தே.பொ : இரசம், கெந்தி, நேர்வாளம், அரிசித்திப்பிலி – இவை வகைக்கு 4 கி

செ.மு : மேற்கூறிய சரக்குகளை நல்ல தண்ணீர் விட்டு பதினைந்து மணி நேரம் அரைக்கவும். பின்னர் 65 மி.கி. வீதம் உருண்டை செய்து நிழலில் உலர்த்தி சீசாவில் அடைத்து வைத்துக் கொள்ளவும்.

அளவு : நாள் ஒன்றுக்கு ஒரு மாத்திரை.

து. ம. : தாய்ப்பால், நொச்சிச்சாறு, துளசிச்சாறு, இஞ்சி சுரசம்.

தீ.நோ : உப்பு மாந்தம், எல்லாவகை மாந்தம்.

பத்தியம் : சுட்ட புளி, வறுத்த உப்பு கூட்டவும்.

குறிப்பு: *கர்ப்பிணிகள், குழந்தைகள் வயதானவர்களுக்கு நேர்வாளம் சேர்ந்த மருந்து கொடுக்கக்கூடாது.*

## மாத்திரை – 17

தே.பொ : அதிமதுரம், பொரித்த வெண்காரம், வெள்ளை மிளகு – வகைக்கு 12 கி, கற்றாழைச்சோறு – தேவையான அளவு.

செ.மு : மேற்கூறிய பொருட்களைக் கல்வத்திலிட்டுக் கற்றாழைச் சோறு விட்டு அரைத்து மிளகளவு மாத்திரை செய்து நிழலில் உலர்த்திக் கொள்ளவும்.

அளவு : இரண்டு மாத்திரை.

தீ.நோ : இருமல்

குறிப்பு: *வாயில் இரண்டு மாத்திரையை அடக்கி உமிழ்நீரை மட்டும் விழுங்கவும்.*

## மாத்திரை – 18

தே.பொ : தான்றிக்காய், கடுக்காய், சுக்கு, மிளகு, திப்பிலி – சரி அளவு.

செ.மு : மேற்கூறிய பொருட்களை எடுத்துப் பொடி செய்து பசுவின் கோமியத்தில் கலந்து 130 மி.கி. அளவில் உருண்டை செய்து கொள்ளவும்.

அளவு : தேவையான அளவு

குறிப்பு: *அனுபானத்திற்கேற்ப தீரும் நோய் மாறுபடுகிறது. அவை கீழே தரப்பட்டுள்ளன.*

*1. விஷப்பாண்டுக்கு, தேனில் ஐந்து உருண்டை கொடுக்கவும்.*

*2. பதிமூன்றுவகை சன்னிக்கு, குடிநீர், காடியில் இடவும். தேள் கொட்டினால் இஞ்சிச் சாற்றிலிடவும். இரத்தம் கண்டால் உருண்டை பாய்ச்சவும்.*

*3. காசரோகத்துக்கு, வெற்றிலைச் சாற்றிலிடவும்.*

*4. அரையாப்புக்குப் புளியம்புறணி (புளியம் ஒடு) சாம்பல் செய்து வென்னீரில் போட்டு ஐந்து உருண்டை கொடுக்கவும்.*

*5. மூலம் பதினெட்டுக்கு, கையாந்தகரைச் சாற்றிலிடவும்.*

*6. மூலக்கழிச்சலுக்கு – நெல்லிப்பருப்பினைப் பொடி செய்து அதனுடன் வில்வ இலையை அரைத்துச் சேர்த்து மோரில் குழப்பி உருண்டையிடவும்.*

*7. பலவகை வாய்வுக்கு வெண்ணொச்சிச் சாற்றிலிடவும்.*

*8. விப்புருதிக்கு அசமதாகத்திலிடவும்.*

*9. சகல வியாதிக்கும் தேனில் அல்லது நெய்யிலிடவும்.*

*10. முப்பத்தொரு வகை முயல்வலிகளுக்கு, கரிய பவளத்திலிடவும்.*

*11. ஊமத்தை விதையைத் தின்றவற்கு, கண்ணுக்கு அஞ்சன மிடத் தீரும்.*

*12. தலைவலிக்கு, ஐந்து உருண்டை எலுமிச்சம் பழச் சாற்றில் உரைத்து நெற்றியிலிடத் தீரும் (வெளிப்பிரயோகம்)*

*13. மேகம், சத்தி விக்கல், அதிசாரக்கழிச்சலுக்கு, சுக்கு, மிளகு, திப்பிலி, நெல்லிக்காய், தான்றிக்காய் குடிநீரில் இடவும்.*

*14. சிரங்குக்கு எருமைத் தயிரிலிடவும்.*

*15. வெண்குட்டத்துக்கு, கோரைக்கிழங்கின் பொடியுடன் நல்ல வெல்லம் கூட்டியதில் உருண்டை உட்கொள்ளத் தீரும்.*

## மாத்திரை – 19

தே.பொ : நெல்லிக்காய்க்கெந்தகம் – 488 மி.கி. தண்ணீர்– 1.3 லி, கற்றாழைச் சோறு – 1.3 லி

செ.மு : கெந்தகத்தைப் பொடி செய்து வைத்துக் கொள்ளவும். 1.3 லி தண்ணீரில் கெந்தகம், கற்றாழைச் சோறு இவற்றைக் கலந்து, மெல்லிய சீலையிலே வடிகட்டிக் கொள்ளவும். ஒரு மண் பானையின் மேலே கெந்தகத்தை வைத்து சீலைமண் செய்து கொள்ளவும். பிறகு காட்டெருமை வறட்டியை பானையைச் சுற்றி ஒன்றரை அடி உயரத்திற்கு அடுக்கிப் புடம் போடவும். இரண்டாவது முறையாக இதே முறையில் புடம் போடவும். ஆறவிட்டு எடுத்து புதுக்கலயத்தில் வைத்துக் கொள்ளவும். 135 மி.கி. அளவிற்கு உருண்டை செய்து கொள்ளவும்.

அளவு : நாள் ஒன்றுக்கு ஐந்து உருண்டை வீதம் இருபது நாட்கள் சாப்பிடவும்.

துு. ம. : நெய்

தீ.நோ : படர் தாமரை.

குறிப்பு: ஒவ்வொரு நாளும் ஒரு உருண்டை வீதம் அதிகப்படுத்தவும், நாற்பதாம் நாள் அன்று பசுவின் நெய், துவரம்பருப்பு, முருங்கைக்காய் கூட்டவும்.

## மாத்திரை – 20

தே.பொ : நல்வேளைவேர், உள்ளி, மிளகு, வாளம்.

செ.மு : மேல் உள்ளவற்றைக் கூட்டி வெந்நீரிலரைத்து 130 மி.கி. அளவு உருட்டிக் கொள்ள வேண்டும்.

அளவு : ஒரு மாத்திரை வீதம் இரண்டு நாட்கள்.

தீ.நோ : மலசலக்கட்டு

## மாத்திரை – 21

தே.பொ : சந்தனம், ஏலம், இலவங்கம், அதிமதுரம், பெருமரப் பட்டை, கிராம்பு, அதிவிடையம், கற்கடகசிங்கி, கஸ்தூரி மஞ்சள், காசுக்கட்டி, வாய்விளங்கம், சுக்கு, திப்பிலி, கம்பிப் பிசின், சாதிபத்திரி, ஓமம் – வகைக்கு 8 கி, கோரோசனை – 64 கி

செ.மு : மேற்கூறிய பொருட்களைச் சேர்த்துப் பொட்டணங்கட்டி சட்டியில் துளசியை கீழும் மேலும் பரப்பி நடுவில் பொட்டணத்தை வைத்து 5 லி நீர் விட்டு 4 லி ஆகும் வரை எரித்து மீதமுள்ள சரக்கை அந்த நீரிலரைத்து சுமார் 400 மி.கி. அளவு உருட்டி உலர்த்திக் கொள்ளவும்.

அளவு : இரண்டு மாத்திரை வீதம்.

துு. ம. : பெருவாரிக் காய்ச்சலுக்கு – வெந்நீரில்

தாப சுரத்துக்கு, சேத்தும சுரத்துக்கு – துளசிச் சாற்றில்.

தீ.நோ : எல்லா வகைக்காய்ச்சல், மாந்தகணம், போர் மாந்தம்.

குறிப்பு: *தாய்ப்பாலிலிட வறக்கணை, நாவறட்சி நிற்கும். பெரிய பிள்ளையானால் வென்னீர் விடவும். கழிச்சல் மிகுந்தால் மாதுளை இலை பிட்டவித்து அந்தச் சாற்றில் கொடுக்கத் தீரும்.*

## மாத்திரை – 22

தே.பொ : முறைப்படி சுத்தி செய்த கெந்தகம், இந்துப்பு, பச்சை நாவி, முழுக்கடுக்காய், நிலவாகைக் குடிநீர் – தேவையான அளவு

செ.மு : மேற்கூறிய பொருட்களை நிலவாகைக் குடிநீர் விட்டு அரைத்து உருண்டை செய்து நிழலில் உலர்த்தி எடுத்துக் கொள்ளவும்.

அளவு : கடலை அளவு, மோரில் தினம் ஒரு உருண்டை இடவும். இளவெந்நீரில் ஒரு உருண்டை இடவும்.

தீ.நோ : எட்டு குன்மம்.

பத்தியம் : கொள்ளுக்காடி, கொம்மட்டிக்காய், கோழி, பன்றி, பெரிய பாகற்காய், கிள்ளுக்கீரை, செம்பு பாத்திரத்தில் வைக்கப் பட்ட தயிர், பெரிய பீர்க்கங்காய், இவை எல்லாம்.

குறிப்பு: *முன்னமே வென்னீரில் ஒரு உருண்டை வைக்கவும். மோரிலே இட வேண்டாம். ஒரு கரண்டியிலே விளக்கெண்ணெய் விட்டு வைக்கவும். பிறகு வெள்ளாட்டுப் பாலிலே அரைத்துக் காய்ச்ச சுத்தியாகும். கெந்தகத்தை அரைக்காமல் காய்ச்சவும் சுத்தியாகும்.*

## மாத்திரை – 23

தே.பொ : கையாந்தகரைச்சாறு – வேண்டிய அளவு, நேர்வாளம் – வேண்டிய அளவு, நெல்லிக்காய்க் கெந்தகம், துத்தம், துருசு, மனோசிலை, லிங்கம், தாளகம், கருநாவி, கௌரி, வெண்காரம்,

சீனக்காரம், கடுகுரோகணி, சாதிபத்திரி, சாதிக்காய், தான்றிக்காய், மாசிக்காய், கடுக்காய், நெல்லிக்காய், சுக்கு, மிளகு, திப்பிலி, ஓமம், கிராம்பு, அதிமதுரம், அக்கிராகாரம், கருஞ்சீரகம், நற்சீரகம் – வேண்டிய அளவு

செ.மு : நேர்வாளத்தை நஞ்சு போக்கி சுத்தி செய்து எடுத்துக் கொள்ளவும். மேற்கூறிய பொருட்களைக் கையாந்தகரைச் சாற்றில் பத்து நாள் ஊற வைத்து அரைத்து 65 மி.கி. அளவிற்கு உருண்டை செய்து நிழலில் உலர்த்தி எடுத்துக் கொள்ளவும்.

அளவு : நோயின் வன்மை, நோயாளியின் தன்மை அறிந்து கொடுக்கவும்.

து. ம. : விழுதியிலைச்சாறு

தீ.நோ : அன்னபேதி, வாயு அகன்று பசி உண்டாகும்.

குறிப்பு: *விழுதி இலைச் சாற்றிலிட உடம்பின் வெப்பம் தணியும்.*

## மாத்திரை – 24

தே.பொ : சந்தனத்தூள், சுக்கு – வகைக்கு 105 கி, பொன்னாங் காணிவிதை – 70 கி, சீரகம் – 35 கி

செ.மு : மேற்கூறியவற்றைக் கல்வத்திலரைத்து பெரிய வில்லைகளாகச் செய்து உலர்த்தி வைத்துக் கொள்ளவும்.

அளவு : வேளைக்கு 12 கி அளவாக உடைத்துச் சாப்பிடவும்.

து. ம. : பன்னீர் அல்லது நல்ல தண்ணீர்.

தீ.நோ : இருதயம் வலுவடையும்.

❖❖❖❖❖

# 12. மெழுகு வகைகள்

## மெழுகு – 1

தே.பொ : வீரம், பூரம் – வகைக்கு 12 கி, லிங்கம் – 4 கி, வெள்ளைப்பூண்டு – 36 கி, கருப்பட்டி – 190 கி.

செ.மு : மேற்கூறிய கல்வத்தில் இட்டு அரைத்து வழித்து வைத்துக் கொள்ளவும்.

அளவு : தேற்றான்விதை அளவு, காலை, மாலை மூன்று நாட்கள்.

து. ம. : கருப்பட்டி

தீ.நோ : கிரந்தி

பத்தியம் : உப்பில்லாப்பத்தியம் இருக்கவும். ஐந்தாம் நாள் உப்பு வறுத்துக் கூட்டவும்.

## மெழுகு – 2

தே.பொ : இலிங்கம், பூரம் வகைக்கு–10 கி, ஓமம் – 35 கி, தயால்ப்பால், தேன் – தேவையான அளவு.

செ.மு : மேற்கூறிய மூன்றையும் தாய்ப்பாலும் தேனும் விட்டரைத்து வைத்துக் கொள்ளவும்.

அளவு : 135 மி.கி.

தீ.நோ : தோஷம் நீங்கும்.

## மெழுகு – 3

தே.பொ : சாதிக்காய், அபினி, காமப்பூ – இவை வகைக்கு 4 கி, ஊர்க்குருவி – 1, நெய் – தேவையான அளவு.

செ.மு : மேற்கூறிய பொருட்களை அரைத்துக் கொள்ள வேண்டும். ஊர்க்குருவியின் வயிற்றைக் கீறி அதனுள் இருக்கும் குடல், அசுத்தங்களை நீக்கிவிட வேண்டும். பின்பு அரைத்த விழுதை ஊர்க் குருவியின் வயிற்றின் உள்ளே வைத்து நூலினால்

தைத்து விட வேண்டும். பின்பு நெய் விட்டு பொரித்து எடுத்துக் கொள்ள வேண்டும். பொரித்து எடுத்த பிறகு எலும்பைப் போக்கி மெழுகு போல் அரைத்துக் கொள்ள வேண்டும்.

அளவு : கழற்சிக்காய் அளவு ( 6 முதல் 12 கிராம்) ஒரு வேளை பாலில் சாப்பிடவும். நாற்பது நாட்கள் சாப்பிடவும்.

தீ.நோ : தாது விருத்தி, உடல் வலிமை

குறிப்பு: *மருந்து உண்ட உடன் 165 மி.லி. அளவு பால் சாப்பிடவும்.*

❖❖❖❖❖

# 13. குழம்பு

தே.பொ : தேன், நெய், நல்லெண்ணெய்–வகைக்கு 335 மி.லி, வில்வ வேர்ப்பட்டை–5. 3 லி, தண்ணீர் – 21. 5 லி பனைவெல்லம் – 560 கி, முத்தக்காசு, கொத்துமல்லி, இலவங்கம், தான்றிக்காய், கிராம்பு, சாதிபத்திரி, நாகப்பூ, நறும்பிசின் – வகைக்குச் சம எடை எடுத்துப் பொடித்த தூள்.

செ.மு : வில்வ வேர்ப்பட்டையை இடித்து அதனுடன் 21.5 லி தண்ணீரை ஊற்றி 5. 3 லிட்டருக்குச் சுருக்கிக் கொள்ளவும். மேற்படி தூளைத் தண்ணீரில் பிசைந்து வடித்துச் சேர்த்துக் கொள்ளவும். ஒரு வருடத்திய பனைவெல்லத்தைப் போட்டுக் குழம்பாக்கிக் கொள்ளவும். தேன், நல்லெண்ணெய், நெய் விட்டு அடிபிடிக்காமல் கிண்டி இறுகின பதத்தில் இறக்கி வைத்துக் கொள்ளவும்.

அளவு : நாளொன்றுக்கு 8 கி வீதம் 650 மி.கி. சர்க்கரையில் மத்தித்துக் கொடுக்கவும்.

தீ.நோ : பித்த நோய்கள், நரம்பு நோய்கள் நீங்கும், தாது விருத்தியடையும்,

பத்தியம் : காரம், புளிப்பு தவிர்க்கவும்.

# 14. செந்தூர வகைகள்

## செந்தூரம் – 1

தே.பொ : வீரம், பூரம், இரசம், இலிங்கம், நெல்லிக்காய்க் கெந்தகம், இரச செந்தூரம் – வகைக்கு 4 கி

செ.மு : மேற்கூறியவற்றைத் தாய்ப்பால் விட்டு ஒரு நாளரைத்து வெயிலில் வைத்தெடுக்கச் செந்தூரமாகும்.

அளவு : 488 மி.கி. வீதம் காலை, மாலை ஏழு நாட்கள்.

து. ம. : பனைவெல்லம்

தீ.நோ : வாய்வு, சுரம், வீக்கம், மேகம், சன்னி, நீரேற்றம்.

பத்தியம் : இச்சாபத்தியம்

குறிப்பு: *பனைவெல்லத்திற்குள் பொதிந்து வைத்துச் சாப்பிடவும்.*

## செந்தூரம் – 2

தே.பொ : இரசம் – 24 கி, தாளகம், இலிங்கம், கெந்தி வகைக்கு4கி, எலுமிச்சம்பழச்சாறு, கற்றாழைச்சோறு – தேவையான அளவு,

செ.மு : மேற்சொன்ன சரக்குகளைக் கற்றாழைச்சாறு விட்டு அரைக்கவும். பின் எலுமிச்சம் பழச்சாறு விட்டு அரைக்கவும். அரைத்த விழுதை வில்லை தட்டி உலர வைத்து ஓட்டில் வைத்து மேலோடு மூடி மூன்று சீலை செய்யவும். பின் ஐந்து எருவில் புடம் போடவும். செந்தூரமாகும்.

அளவு : 488 மி.கி.

து. ம. : பசுநெய், வெண்ணெய், தேன்

தீ.நோ : சுரம், சன்னி

குறிப்பு: *வயிற்று வலிக்குச் சர்க்கரையில் கொடுக்கலாம்.*

## செந்தூரம் – 3

தே.பொ : வீரம் – 8 கி, பூரம் – 16 கி, இலிங்கம் – 32 கி, பிள்ளைப்பால், கோழிமுட்டை, பனைவெல்லம் – வேண்டிய அளவு.

செ.மு : வீரத்தை, கோழிமுட்டையின் வெள்ளைக் கருவால் சுத்தி செய்து, இலிங்கம், பூரத்தைத் தாய்ப்பாலில் சுத்தி செய்து கல்லுரலில் அரைத்துச் செந்தூரம் செய்யவும்.

அளவு : 130 மி.கி., மூன்று வேளை

து. ம. : பனைவெல்லம்

தீ.நோ : சன்னி சுரம், வாய்வு, வாதம், நீரேற்றம், நெஞ்சு வலி.

குறிப்பு: *தூதுவளை, சுக்கு, அரத்தை, கண்டங்கத்திரி, பிரண்டை சேர்த்துக் காய்ச்சிய குடிநீரில் வெள்ளைச் சீனி போட்டு, குங்குமப்பூ, கோரோசனை சேர்த்துக் கொடுக்கவும்.*

## செந்தூரம் – 4

தே.பொ : இரச செந்தூரம் – 24 கி, இலிங்கம் – 4 கி, பனைவெல்லம், பிள்ளைப்பால், கோழிமுட்டை – தேவையான அளவு,

செ.மு : சுத்தி செய்த இலிங்கத்தையும், இரச செந்தூரத்தையும் கல்வத்தில் வைத்துப் பிள்ளைப்பால் விட்டரைத்துச் சிமிளில் எடுத்து வைத்துக் கொள்ளவும்.

அளவு : 488 மி.கி.

து. ம. : பனைவெல்லம்

தீ.நோ : சகல வாய்வு, சகல ரோகம்.

குறிப்பு: *இலிங்கத்தைக் கோழிமுட்டை வெண்கருவில் சுத்தி செய்து கொள்ள வேண்டும். இரச செந்தூரத்தைப் பிள்ளைப் பாலில் ஊற வைத்து எடுத்துக் கொள்ள சுத்தியாகும்.*

❖❖❖❖❖

# 15. பற்ப வகைகள்

## பற்பம் – 1

தே.பொ : கோழி முட்டை – 20

செ.மு : முட்டைகளை உடைத்து ஊற்றிவிட்டு ஓடுகளை மட்டும் எடுத்துக் கொள்ளவும். அவற்றை வானக் குழியில் அடைக்கவும். குழாயின் வாய்க்குச் சில்லு போட்டு மூடி சுண்ணாம்புக் கால்வாயில் வைத்து அதன் மேல் கற்களைக் கொட்டவும். கற்களை ஒருநாள் வேக வைத்து அடுத்த நாள் வானக் குழாயை எடுத்துக் கொட்டவும். பின் அதைப் பொடி செய்து சிமிளில் வைக்கவும்.

அளவு : வேளைக்கு 244 மி.கி. ஏழு நாட்கள்

து. ம. : 3 வெற்றிலை, பாக்கு.

தீ.நோ : தாது விருத்தியாகும்.

## பற்பம் – 2

தே.பொ : துத்தநாகம் – 66 கி, துருசு – தேவையான அளவு, கல்லுப்பு – தேவையான அளவு, இரசம் – 22 கி எலுமிச்சம் பழச்சாறு – தேவையான அளவு.

செ.மு : துத்தநாகத்தை எலுமிச்சம் பழச்சாற்றில் பத்து முறை உருக்கி எடுத்துக் கொள்ளவும். பிறகு புதுசட்டியில் வட்டமாக துருசினை விடவும். பிறகு 22 கி இரசத்தை விடவும். அதன் மேலே துத்தநாகத்தை வைக்கவும். பின்னர் வட்டிகையைக் கொண்டு கவிழ்த்து அதன்மேலே கல்லுப்பைப் போட்டு ஒரு சட்டி கொண்டு மூடவும். சீலை மண் செய்து இரவில் பனிரெண்டு மணி நேரம் விளக்கேற்றினாற் போலே எரிக்கவும். ஆறின பிறகு எடுத்துப்பொடி செய்து கொள்ளவும்.

அளவு : 65 மி.கி. எருமை வெண்ணெயில் பொடி கலந்து கொடுக்கவும்.

தீ.நோ : நீரிழிவு

பத்தியம் : பத்தியம் இருக்கவும்.

## பற்பம் – 3

தே.பொ : ஆகாசக்கெருடன் கிழங்கு – சிறியது, இரசம்.

செ.மு : ஆகாசக்கெருடன் கிழங்கை எடுத்துத் துவாரமிட்டு அதிலே வேண்டின இரசத்தை விட்டு அந்தக் கிழங்கு கொண்டு இரசத்தை மூடி ஒரு நாள் எரிக்கவும். அதை எடுத்துப் பார்க்க நீறாகி இருக்கும். அதை எடுத்துச் சிமிளில் வைத்துக் கொள்ளவும்.

அளவு : பத்து நாட்கள்

து. ம. : தேன், இஞ்சிச்சாறு, வெள்ளுள்ளித் தயிலம்.

தீ.நோ : விஷப்பாண்டு, விஷபாகம், மஞ்சள் காமாலை, சோகை.

குறிப்பு:

*தேனில் பத்து நாட்கள் கொடுக்க – விஷப்பாண்டு*
*இஞ்சிச்சாற்றில் இட – விஷப்பாகம்*
*வெள்ளுள்ளித் தயிலத்தில் இட – மஞ்சள் காமாலை, சோகை.*

## பற்பம் – 4

தே.பொ : சாதிலிங்கம், இண்டு இலை – தேவையான அளவு, கல்லுப்பு – 1300 கி, வாழையிலை, பனங்கருப்பட்டி.

செ.மு : இண்டம் இலையை அரைத்துக் குகை செய்து இலிங்கக் கட்டியை அதனுள் வைத்துக் கொள்ளவும். புது சட்டியில் கல்லுப்பு இட்டு அதனுள் அக்குகையை வைத்து உப்பு கொட்டி மூடி வாழை இலையை

அரைத்து மேல் சட்டிக்குள்ளே பூசிக் கவிழ்த்து சீலை மண் செய்து பனிரெண்டு மணிநேரம் எரிக்கப் பற்பமாகும். மேல் சட்டியில் உள்ளதையும் குகைக்குள் உள்ளதையும் எடுத்து அரைத்து வைத்துக் கொள்ளவும்.

அளவு : 488 மி.கி

து. ம. : பனங்கருப்பட்டி

தீ.நோ : சயரோகம், புண்.

## பற்பம் – 5

தே.பொ : அண்ட ஓடு, தாளகம், சுண்ணாம்பு நீர், நிலாவாரை – தேவையான அளவு

செ.மு : அண்ட ஓட்டைப் பொடி செய்து கொள்ளவும். அதனுடன் நிலாவாரையைச் சுண்ணாம்புத் தண்ணீர் விட்டு அரைத்துக் குகை செய்து, மேல் மூடி செய்து காய வைத்துக் கொள்ளவும். அதற்குள் தாளகத்தை வைத்து மூடி சீலைமண் செய்து பத்து வறட்டியில் புட மிடவும். உலர்ந்த பிறகு தாளகம் பற்பமாகும்.

அளவு : 25 மி.கி. பத்து நாட்கள்.

து. ம. : தேன்

தீ.நோ : பித்த சுரம், இருமல், இரைப்பு, இளைப்பு.

பத்தியம் : உப்பு, புளி நீக்கவும்.

## பற்பம் – 6

தே.பொ : லிங்கம், கடல் உப்பு – 325 மி.கி. கருந்துளசிச்சாறு – தேவையான அளவு.

செ.மு : கடல் உப்பை, கருந்துளசிச்சாறு விட்டு அரைத்து இலிங்கத்திற்குக் கவசம் செய்து, சீலை சுற்றி காய வைக்கவும். பின்னர் பத்து எருவில் புடம் போட்டெ டுக்கப் பற்பமாகும்.

அளவு : 65 மி.கி

து. ம. : இஞ்சி சுரசம், தேன், சர்க்கரை

தீ.நோ : சன்னி தோஷம், மேகநீர், சுரம்.

### பற்பம் – 7

தே.பொ : லிங்கம், சிவமூலிவேர்ப்பட்டை – தேவையான அளவு

செ.மு : சிவமூலி வேர்ப்பட்டையை அரைத்து லிங்கத்திற்குக் கவசம் செய்து, சீலை மண் செய்து பத்து எருவில் புடம் போட பற்பமாகும்.

அளவு : 65 மி.கி.

து. ம. : தேன்

தீ.நோ : சுரப்பிணிகள், தோல் நோய்கள்.

பத்தியம் : இச்சாபத்தியம்

❖❖❖❖❖

# 16. மருந்து வகைகள்

### மருந்து – 1

தே.பொ : பறங்கிப்பட்டை , பிரப்பங்கிழங்கு, சுக்கு, வசநாபி, திருகுகள்ளி – தேவையான அளவு,

செ.மு : முன் உள்ள மூன்றையும் நொறுங்க இடித்துத் தெளித்து வைத்துக் கொள்ளவும். வசநாபியைப் பிஞ்சாகக் கொண்டு வந்து துவைத்துச் சாறு எடுத்துக் கொள்ளவும். அந்தச் சாற்றில் 3.9 லி. சாறு எடுத்து மேற்படி தூளை விட்டுப் பிசைந்து கொள்ளவும். திருகுகள்ளியை ஒரு பானையில் போட்டு அந்தப்பானை வாயிலே வேடு கட்டவும். அதில் பிசறி வைத்துள்ள மருந்தை அள்ளி வைத்து புட்டாக வேக வைக்கவும். வெந்ததும் முறத்தில் எடுத்து உடைத்து வைத்துக் கொள்ளவும்.

அளவு : நோயின் வன்மை, நோயாளியின் தன்மை அறிந்து கொடுக்கவும்.

தீ.நோ : தாது விருத்தி உண்டாகும்.

## மருந்து – 2

தே.பொ : சுக்கு, மிளகு, திப்பிலி – சமவெடை, நாட்டுச் சர்க்கரை – வேண்டிய அளவு

செ.மு : மேற்கூறிய சரக்குகளை மைபோல அரைக்கவும். பின் மெல்லிய துணியில் போட்டு வடிகட்டவும். வடிகட்டிய மருந்துடன் நாட்டுச் சர்க்கரை சேர்த்து அம்மருந்துடன் பசுவின் நெய் விட்டுக் குழைத்துக் கொள்ளவும்.

அளவு : வெருகடி அளவு, மூன்று நாட்கள்.

து. ம. : பசுவின் நெய்

தீ.நோ : புகையிருமல்.

## மருந்து – 3

தே.பொ : ஆடாதோடையிலை, செப்பு நெருஞ்சியிலை, அமுத வள்ளியிலை, கழற்கொடியிலை, தூதுவளையிலை பெருங்குறிஞ்சியிலை, பிரமியிலை, காட்டுப்பாகலிலை – சம அளவு.

செ.மு : மேற்கூறிய இலைகளை நெய்விட்டு வதக்கிப் பொடித்து வீட்டு விலக்கமான முதல் மூன்று நாட்கள் சாப்பிட பிள்ளையுண்டாகும்.

அளவு : தேவையான அளவு

தீ.நோ : கர்ப்பம் தரித்தல்

## மருந்து – 4

தே.பொ : பசுவின் வெண்ணை, வெல்லம்–தேவையான அளவு, சிறுகீரை, பொன்னாங்காணி–சம அளவு, ஏலம், சீரகம் – சம அளவு.

செ.மு : ஏலத்தையும் சீரகத்தையும் பொடித்து இதனுடன் சிறுகீரை, பொன்னாங்காணி இலைகளை அரைத்துப் பொடித்த வெல்லம், பசு வெண்ணையில் குழப்பிச் சாப்பிடவும். உடன் நீர் குடிக்கவும்.

அளவு : தேவையான அளவு

து. ம. : வெல்லம், பசுவெண்ணை.

தீ.நோ : குடல் படுவன்

## மருந்து – 5

தே.பொ : இரசம், பூரம், இலிங்கம், வீரம், இரசசெந்தூரம் –வகைக்கு 4 கி, சேங்கொட்டை – 30

செ.மு : இரசம், பூரம், இலிங்கம், வீரம், இரசசெந்தூரம் ஆகிய ஐந்தையும் சேர்த்து வறுத்த சேங்கொட்டையில் 35 கி எடுத்து ஒன்று கூட்டி அரைத்துக் கொள்ளவும்.

அளவு : 65–100 மி.கி., மூன்று நாட்கள்

தீ.நோ : இரத்தபுண், சூலைப்பிடிப்பு, மேக வியாதி.

## மருந்து – 6

தே.பொ : கொடிவேலி வேர், பசும்பால்

செ.மு : கொடிவேலி வேரை அரைத்து வைத்துக் கொள்ள வேண்டும்.

அளவு : எலுமிச்சங் காயளவு, ஒரு உருண்டை

து. ம. : நீர் அல்லது பாலில் கலக்கிக் குடிக்க வேண்டும்.

தீ.நோ : ருதுவாக (பூப்படைய)

## மருந்து – 7

தே.பொ : நீர்ப்பூலா இலைச் சாறு – 1.3 லி,
ஈர வெங்காயச் சாறு – 675 மி.லி., வெங்காரம்–4 கி

செ.மு : நீர்ப்பூலா இலைச்சாற்றுடன் ஈரவெங்காயச் சாற்றைச்

சேர்த்து அதனுடன் பொரித்த வெங்காரத்தைக் கலந்து கொடுக்க வேண்டும்.

அளவு : தேவையான அளவு.

தீ.நோ : நீரடைப்பு, மலக்கட்டு.

## மருந்து – 8

தே.பொ : செங்கத்தாரி, சிவனார்வேம்பு, மிளகரணைவேர், சங்கவேர், குளக்கொட்டிக்கிழங்கு, நல்லபிரமி, நெய்க்காயாவேர், சிறுசின்னிமாலை, ஆனாவேர், மானாவேர், நறுவிலி வேர், பூனைக்காலி, ஆடு தின்னாப்பாளை, கொடுவேலி வேர், எருக்கம் வேர் – சம அளவு, வெள்ளாட்டுக் கோமியம்– தேவையான அளவு, கண்டதிப்பிலி, சுக்கு, சித்தரத்தை, கடுக்காய், கருஞ்சீரகம், கடுகுரோகணி, ஓமம், நேர்வாளம், வெள்ளைப்பூண்டு – சம அளவு.

செ.மு : செங்கத்தாரி முதல் எருக்கம் வேர் வரை உள்ளவற்றை வெள்ளாட்டுக் கோமியத்தில் அவித்து, கண்டதிப்பிலி முதல் வெள்ளைப் பூண்டு வரை உள்ள கடைச்சரக்குகளை முடிந்துபோட்டு அவித்து இறுத்து அரைத்துக் கொள்ளவும்.

அளவு : தேவையான அளவு.

தீ.நோ : வீக்கம், விஷபாகம், வாதகரப்பான், காமாலை.

பத்தியம் : வெள்ளாட்டுவற்றல், துவரைக் கச்சல், நாரத்தங்காய் இவை ஆகும். உப்பு சேர்க்கலாம். கரப்பான் பதார்த்தம் கூடாது.

## மருந்து – 9

தே.பொ : துத்திச்செடியின் கிளை (அ) காம்பு, பசும்பால், ஏலரிசி

செ.மு : துத்திச் செடியின் கிளை (அ) காம்புகளைக் கற்றையாகக் கட்டிக் கொள்ளவேண்டும். தேவையான அளவு பசும்பால் எடுத்து அடுப்பில்

வைத்துக் காய்ச்ச வேண்டும். மேற்படி காம்புகளைக் கொண்டு பாலைத் துழாவிக் கொண்டே இருக்கவேண்டும். பால் சுண்டியவுடன் இறக்கிக் கொள்ளவும். பிறகு ஒரு இரவு முழுவதும் (பாலை அசையாமல்) ஆற வைத்து காலையில் பார்க்க உறைந்து சர்க்கரை போல் இருக்கும். அதில் நான்குக்கு ஒரு பங்கு ஏலரிசி பொடித்துச் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

அளவு : மூன்று விரல் கொள்ளளவு, காலை, மாலை, நாற்பது நாட்கள்.

தீ.நோ : திமிர் சோம்பல், மேகஊறல், மேகநோய்.

பத்தியம் : இச்சாபத்தியம்.

## மருந்து - 10

தே.பொ : முள்ளிலவம் பிசின், தயிர்.

செ.மு : முள்ளிலவம் பிசினைத் தண்ணீரில் ஊற வைத்துப்பின் தயிரில் அரைத்துச் சாப்பிடவும்.

அளவு : மூன்று நாட்கள், காலையில் மட்டும்.

தீ.நோ : இரத்தக் கிராணி.

## மருந்து - 11

தே.பொ : எலுமிச்சம் பழம் - 1, அபினி - 2 கி

செ.மு : எலுமிச்சம் பழத்தை நான்கு துண்டுகளாகப் பிளந்து அபினியை அதற்குள் வைத்து நூலால் கட்டி சாணிக் குகையில் வைத்துப் புடம் போடவும். வெந்த பிறகு எடுத்துக் கொள்ளவும்.

அளவு : ஒரு நாளைக்கு ஒரு துண்டு வீதம் நான்கு நாட்கள் சாப்பிடவும்.

தீ.நோ : கிராணி.

## மருந்து – 12

தே.பொ : கற்றாழைச்சோறு – வேண்டிய அளவு, வெள்ளரி விதை, கடுக்காய், வெண்காரம் – வகைக்கு 975 மி.கி.

செ.மு : கடுக்காயைப் பொடி செய்து கற்றாழைச் சோற்றில் கலந்து தண்ணீரை இறுத்துக் கொள்ளவும். வெள்ளரி விதையை அரைத்துக் கலந்து கொள்ளவும். வெண்காரத்தைப் பொரித்துக் கலந்து கொள்ளவும்.

அளவு : மூன்று நாட்கள்

தீ.நோ : நீர்க்கடுப்பு.

## மருந்து – 13

தே.பொ : மாவிலிங்க இலை

செ.மு : மாவிலிங்க இலையை விழுது போல் அரைத்து முள்ளிக்காய் அளவாக உருட்டி நல்லெண்ணெயில் 15 நாட்கள் ஊறப்போட்டு எடுத்துக் கொள்ள வேண்டும்.

அளவு : ஒரு உருண்டை வீதம் காலை, மாலை.

தீ.நோ : சீழ் வெட்டைபிரமியம்.

குறிப்பு: *அனல் கண்டால் கோவைத் தண்டு தண்ணீரினை மேல் பூசவும்.*

## மருந்து – 14

தே.பொ : முற்றிய மாவிலிங்கப்பட்டை, சுண்ணாம்புச் சல்லி – 2.2 கி

செ.மு : மாவிலிங்கப்பட்டையை இடித்து மோர் கூட்டிச் சாறு எடுத்துக் கொள்ளவும். இவற்றுடன் சல்லிச் சுண்ணாம்பு 2.2 கி கரைத்துக் கொள்ள வேண்டும்.

அளவு : 672 மி.லி. 3 வேளை.

தீ.நோ : சீழ்ப்பிரமியம், இரத்த பிரமியம்.

பத்தியம் : ஆறு நாட்கள்

## மருந்து – 15

தே.பொ : தேற்றாங்கொட்டை, பாலையிலைச்சாறு, இளநீர் – தேவையான அளவு, முருங்கைப்பூ, நெய்.

செ.மு : தேற்றாங்கொட்டையைச் சீவி இளநீரில் முழுகுமாறு ஊறப்போட்டு எடுத்துக் கொள்ள வேண்டும். முருங்கைப்பூ ஒன்று, நெய் இரண்டு கரண்டியளவு சேர்த்து மாவு போல் அரைத்து இவற்றுடன் பாலையிலைச்சாறு ஒரு கரண்டியும் சேர்த்துக் கலக்கிக் கொள்ள வேண்டும்.

அளவு : தேவையான அளவு

தீ.நோ : நீர்க்கடுப்பு

## மருந்து – 16

தே.பொ : ஆவாரம்பட்டைப் பொடி – 2600 மி.கி, கொடிவேர் பொடி, சுத்தித்த நெல்லிக்கெந்தகம் பொடி – வகைக்கு 675 மி.கி.

செ.மு : இம்மூன்றையும் கலந்து ஒரு சிமிழில் அடைத்து வைத்துக் கொள்ள வேண்டும்.

அளவு : 200 மி.கி. 48 நாட்கள்.

தீ.நோ : கடி விஷம்

## மருந்து – 17

தே.பொ : கல்லுப்பு – ஒரு கையளவு, பசுநெய் – 675 மி.லி.

செ.மு : அடுப்பில் சட்டியைக் காய வைக்கவும். கல்லுப்பைக் கொட்டி கறுக வறுத்து பசுவின் நெய் சேர்த்து இறக்கிக் கொள்ள வேண்டும்.

அளவு : 25 மி.கி.

தீ.நோ : பெண் குழந்தைகளின் யோனி தளர்ச்சி.

## மருந்து – 18

தே.பொ : கடுகு, கம்பளிசுட்ட சாம்பல், அழிஞ்சிவேர்ப்பட்டை – இவை வகைக்கு 675 மி.கி.

செ.மு : மேற்கூறிய சரக்குகளை அரைத்துக் கொள்ளவும்.

அளவு : குளித்த நாள் முதல் மூன்று நாட்கள் பசுவின் வெண்ணையில் குடிக்கவும்.

து. ம. : பசுவெண்ணை.

தீ.நோ : கர்ப்பம் தரிக்கும்.

## மருந்து – 19

தே.பொ : கஞ்சாயிலை – 12 கி, சுக்கு, கருப்பட்டி வகைக்கு – 350 கி, வெள்ளை வெங்காயம், அக்கிராகாரம், ஏலரிசி, மிளகு, கிராம்பு – வகைக்கு 25 கி, துத்தி – 1 கி, வென்னீர் – தேவையான அளவு

செ.மு : மேற்கூறிய சரக்குகளை இளவறுப்பாய் வறுத்து வெள்ளை வெங்காயத்துடன் சேர்த்து அரைத்துக் கொள்ளவும். மீண்டும் வென்னீரில் ஒரு முறை அரைத்துக் கொள்ளவும்.

அளவு : 2.2 கி

தீ.நோ : குரற்கம்மல்

## மருந்து – 20

தே.பொ : கோழியின் கல்லீரலிலே இருக்கிற மீன் மண்டைக் கல், ஈரவெங்காயச்சாறு, வாட்டிய வெள்ளரிப்பிஞ்சுச் சாறு, வெண்காரம் – 4 கி

செ.மு : மேற்கூறியவற்றை அரைத்துக் கலக்கிக் கொள்ள வேண்டும்.

அளவு : 16 – 30 மி.லி., இருவேளை

தீ.நோ : நீரடைப்பு.

## மருந்து – 21

தே.பொ : சல்லிச் சுண்ணாம்பு, சர்க்கரை – தேவையான அளவு

செ.மு : 1.3 லி தண்ணீரில் சல்லிச் சுண்ணாம்பைக் கரைத்து தெளிய வைத்து இறுத்து எட்டிலொரு பங்கில் சர்க்கரை போட்டுக் குடிக்கவும்.

தீ.நோ : வெட்டை, பிரமேகம், சகலப்பிரமை.

## மருந்து – 22

தே.பொ : கொடிமல்லிகைப்பூ – 2.2 கி

செ.மு : கொடிமல்லிகைப் பூவை அரைத்துப் பசும்பாலில் அருந்தவும்.

தீ.நோ : தாய்ப்பால் சுரக்கும்.

## மருந்து – 23

தே.பொ : கல்லுப்பு, பசு நெய், ஆமணக்கிலை

செ.மு : ஒரு கையளவு கல்லுப்பைச் சட்டியிலிட்டுக் கருக வறுத்து பசுநெய் விட்டு இறக்கிக் கொள்ளவும்.

அளவு : 25 மி.கி., ஒரு வேளை

தீ.நோ : யோனி தளர்ச்சி

குறிப்பு: *ஆமணக்கிலையை யோனியில் வைத்துத் தள்ளவும்.*

## மருந்து – 24

தே.பொ : நாக்கத்தானம் பூச்சி, ஈர வெங்காயம் வகைக்கு – 35 கி, பசுநெய் – வேண்டிய அளவு.

செ.மு : இவை இரண்டையும் நன்றாக அரைக்கவும். பின் அதைப் பசுவின் நெய்யில் போட்டு வேக வைத்துப் பதத்தில் எடுத்து வைத்துக் கொள்ளவும்.

அளவு : நோயின் வன்மைக்கு ஏற்ப சாப்பிடவும். ஐந்து நாட்கள்.

தீ.நோ : கெர்ப்பப்பூச்சி சாகும்.

## மருந்து – 25

தே.பொ : பொட்டிலுப்பு, கல்லுப்பு வகைக்கு – 20 கி

செ.மு : இரண்டு உப்பையும் சட்டியில் போட்டு எலுமிச்சம் பழச்சாறு விட்டு 12 மணி நேரம் ஊற வைத்து எடுத்துக் கொள்ளவும்.

அளவு : மூன்று வேளை, மூன்று நாட்கள் சாப்பிடவும்.

தீ.நோ : கட்டியும், கெண்டையும் கரையும்.

## மருந்து – 26

தே.பொ : சதுரக்கள்ளி, ஏலம்

செ.மு : மேற்குறிப்பிட்ட இரண்டையும் அரைத்து வைத்துக் கொள்ளவும்.

அளவு : நோயின் வன்மைக்கேற்ப கொடுக்கவும்.

து. ம. : பதநீர்

தீ.நோ : வயிற்றின் எரிச்சல்.

## மருந்து – 27

தே.பொ : கோரோசனை, குங்குமப்பூ வகைக்கு – 2 கி, பளிங்குச் சாம்பிராணி, பனைவெல்லம், அக்கிராகாரம், சிறுநாகப்பூ வகைக்கு – 4 கி, சாதிக்காய், கருஞ் சீரகம் வகைக்கு – 8 கி, தேன் – வேண்டிய அளவு.

செ.மு : மேற்கூறியவற்றைத் தேன் விட்டரைக்கவும்.

அளவு : இலந்தைக்காய் அளவு

தீ.நோ : தாதுவிருத்தி உண்டாகும்.

பத்தியம் : இச்சாபத்தியம்

## மருந்து – 28

தே.பொ : இலவங்கக்கொழுந்து, சுக்கு, ஏலரிசி, சோம்பு, அதிமதுரம், சந்தனம், வில்வசதை, ரோசாப்பூ – வகைக்கு 12 கி, தனியா, சீனாக்கற்கண்டு – வகைக்கு 105 கி.

செ.மு : கற்கண்டை ஒரு பானைலியிலிட்டு பாகு காய்ச்சிக் கொள்ளவும். மற்ற சரக்குகளைச் சூரணமாக்கி அப்பாகில் போட்டுக் கெட்டிப்பதமாய்க் கிளறி வைக்கவும்.

அளவு : வேளைக்கு 12 கி

தீ.நோ : இருதயம் வன்மை பெறும்.

## மருந்து – 29

தே.பொ : பசுநெய் – 5 லி, வெங்காயம், வெள்ளாட்டுக்கறி வகைக்கு – 280 கி

செ.மு : வெங்காயத்தையும் கறியையும் அரிந்து போட்டு நெய்யில் வேக வைக்கவும். நன்றாக வெந்ததும் வறுவலாக வறுத்து வைத்துக் கொள்ளவும்.

அளவு : உப்புப் போடாமல் நாற்பத்தெட்டு நாட்கள் சாப்பிடவும்.

தீ.நோ : தாதுவிருத்தி உண்டாகும்.

## மருந்து – 30

தே.பொ : தேங்காய் (நெல் வேகவைக்கும் போது அந்த நெல்லில் புதைத்து வைத்து வேக வைத்து எடுத்தது) ஏலம், தோல் நீக்கிய புரசம் விதை வகைக்கு – 35 கி

செ.மு : மேற்கூறியவற்றை அரைத்து வைத்துக் கொள்ளவும்.

அளவு : கழற்சிக்காய் அளவு

து. ம. : சர்க்கரை

தீ.நோ : வயிற்றுப் பூச்சிகள் விழும்.

## மருந்து – 31

தே.பொ : பச்சைப்பனை ஓலை, தேன், பசும்பால், சிறுபயிறு – தேவையான அளவு

செ.மு : பச்சைப்பனை ஓலையைத் துவைத்து சிறிது தேன் வார்த்துப் பிசைந்து தின்னவும். பசுவின் பாலும் சிறு பயிறும் கஞ்சி காய்ச்சிக் கொடுக்கவும். கல் விழும்.

தீ. நோ : கல்லெரிப்பு.

## மருந்து – 32

தே.பொ : குருவை அரிசி மாவு, நிலக்கடம்புச்சாறு, நல்லெண்ணெய், கருப்புக்கட்டி– தேவையான அளவு.

செ.மு : குருவை அரிசிமாவுடன் நிலக்கடம்பு சாற்றைச் சேர்த்துக் களியாகக் கிண்டி நல்லெண்ணெய் விட்டு கருப்புக் கட்டியைக் கடித்துக் கொண்டு தின்னவும்.

அளவு : தேவையான அளவு

து. ம. : கருப்புக்கட்டி

தீ.நோ : பெரும்பாடு

## மருந்து – 33

தே.பொ : கொள்ளு, கடுக்காய், இந்துப்பு, வெள்ளுள்ளி, பெருங்காயம் – வகைக்குச் சம எடை. விளக்கெண்ணெய் – தேவையான அளவு.

செ.மு : கொள்ளு, கடுக்காய் இவற்றைச் சேர்த்துக் குடிநீராக்கிக் கொள்ளவும். இதனுடன் இந்துப்பு வெள்ளுள்ளியைச் சேர்த்துக் கொள்ளவும். சட்டியில் விளக்கெண்ணெய் விட்டு பெருங்காயத்தைப் போட்டுத் தாளித்துக் குடிநீருடன் கலந்து கொள்ளவும்.

அளவு : 16 மி.லி.

தீ.நோ : நீர்க்கோர்வை, மகோதரம்.

குறிப்பு: *பெருங்காயம் சற்று அதிகம் சேர்க்கவும்.*

## மருந்து – 34

தே.பொ : துரத்தி சமூலம், வெள்ளாட்டுக் கோமியம், பசு கோமியம் – வேண்டிய அளவு

செ.மு : துரத்தி சமூலத்தை வெள்ளாட்டுக் கோமியம், பசுவின் கோமியம் இவற்றில் வேக வைத்துக் கொடுக்கவும்.

அளவு : நோயின் தன்மை, நோயாளியின் வன்மை, மென்மைக்கேற்ப.

தீ.நோ : விஷம்

பத்தியம் : மோர் சாதம் கூட்டவும்.

## மருந்து – 35

தே.பொ : நாள்பட்ட கிட்டம் – பூசணிக்காய் அளவு, பசுவின் கோமியம், கையாந்த கரைச்சாறு, பச்சை மிளகு வகைக்கு – சம எடை.

செ.மு : நாள்பட்ட கிட்டத்தைப் பசுவின் கோமியத்தில் நாற்பது நாட்கள் ஊறவைத்தெடுத்துப் பொடி செய்து கொள்ளவும். பிறகு கையாந்தகரைச் சாறு விட்டு இடித்து வடித்துக் கொள்ளவும். பச்சை மிளகைப் பொடி செய்து அரைத்துச் சம அளவு கூட்டிச் சூரணம் செய்து கொள்ளவும்.

அளவு : மூவிரலளவு, நாற்பத்தைந்து நாட்கள் கொடுக்கவும்.

து. ம. : பசுவின் மோர்.

தீ.நோ : ஊது காமாலை

பத்தியம் : முருங்கை இலை, துவரம் பருப்பு, கொடுவழுதலங்காய் ஆகும்.

## மருந்து – 36

தே.பொ : முருங்கை, வெந்தயம், பாசிப்பயிறு, சுக்கு – வகைக்கு – 5 கி

செ.மு : மேற்கூறிய பொருள்களுடன் இளநீரைச் சேர்த்துக் காய்ச்சி சர்க்கரை போட்டுக் கொடுக்கவும்.

தீ.நோ : சத்தி, தியக்கம், பித்தம், வாய்நீர், மந்தத்தின் மேல் வரும் சுவாசம், வயிற்றெரிவு.

## மருந்து – 37

தே.பொ : தண்ணீர் – 5.3 லி, சாதிக்காய் – மூன்று, ஆவிரை

செ.மு : ஆவிரையைத் தேய்த்து 5.3 லி தண்ணீருள்ள பானையில் மிதக்க விட்டு ஒரு விறகால் எரித்து 3.9 லிட்டராக்கி சாதிக்காய்களைப் போட்டு வெந்த பிறகு எடுத்துக் கொள்ளவும்.

அளவு : நாள் ஒன்றுக்கு ஒரு சாதிக்காயை அரைத்து 325 மி.லி. தண்ணீரில் கொடுக்கவும்.

தீ.நோ : வெட்டை, கால்கைபிடிப்பு, கடுப்பு.

## மருந்து – 38

தே.பொ : நாக்குப்பூச்சி, தேன்.

செ.மு : நாக்குப்பூச்சியை அலசிப் போட்டு பழந்துணியில் வைத்து சுருட்டி நூல் கொண்டு கட்டி நெருப்பில் வேக வைத்து சாம்பலை எடுத்துக் கொள்ளவும்.

அளவு : தேவையாள அளவு

து. ம. : தேன்

தீ.நோ : அரோசிகம்.

## மருந்து – 39

தே.பொ : அமுக்கிராவேர், ஆதண்டைவேர், தண்ணீர்மீட்டான் கிழங்கு, அதிமதுரம், கடுக்காய், நெல்லி, நறும்பிசின் சதகுப்பை, இலவங்கம், பச்சிலை, ஏலம் – வகைக்கு 13. கி

செ.மு : மேற்கூறியவற்றையெல்லாம் அரைத்துப் பதத்தில் வழித்து வைத்துக் கொள்ளவும். உள்ளங்கையிலிட்டு சாப்பிடவும்.

அளவு : தேவையாள அளவு

தீ.நோ : வாதம், பிள்ளை பெற்றளுக்கு வரும் வாதம், சோபம், சிறுபிள்ளைகளின் எலும்பு முறிவு, வெட்டுக் குத்துகளால் வரும் சுரம்.

## மருந்து – 40

தே.பொ : கெந்தகம், அக்கிராகாரம், வெண்காரம், சுக்கு, மிளகு – வகைக்கு 28 கி

செ.மு : இவற்றையெல்லாம் குழி அம்மியில் வைத்து மூன்று நாட்கள் அரைத்துக் கொள்ளவும்.

அளவு :

தீ.நோ/ : (அ) ஒரு வேளைக்கு 488 கி.கி. வீதம் பதிமூன்று

நாட்கள் கஞ்சாங்கோரைச் சாற்றில் கொடுக்க சகல சுரமும் தீரும்.

(ஆ) வேலிப்பருத்திச் சாற்றில், குப்பைமேனிச் சாற்றில், தும்பைச் சாற்றில் கொடுக்க நடுக்க சுரம் தீரும். தேனில் கொடுக்க சயம், சுவாசகாசம், இருமல் தீரும்.

(இ) கொடிவேலிக் குடிநீரில் கொடுக்க விப்புருதியும், கடுக்காய்க் குடிநீரில் கொடுக்க உறுப்பு ரோகமும், சுக்கு, மிளகு நீரில் கொடுக்க கபாலச் சூலையும், நொச்சியிலைச் சாற்றில், நெருஞ்சிப் பாலைச் சாற்றில் கொடுக்க – நாய்க்கடியும் நீங்கும்.

## மருந்து – 41

தே.பொ : மிளகு, சீரகம் – 975 மி.கி. சர்க்கரை 3.9 கி.கி
பசும்பால் தண்ணீர் – வகைக்கு 650 மி.லி.
செந்தொட்டி வேர் – வேண்டிய அளவு.

செ.மு : மிளகு, சீரகம் இரண்டையும் அம்மியில் வைத்து நன்றாய் நுணுக்கி சர்க்கரை சேர்த்துப் பிசறி வைத்துக் கொள்ளவும். செந்தொட்டி வேரை ஓடு நீக்கி நறுக்கிச் சேர்த்துக் கொள்ளவும். பசுவின் பால், தண்ணீர், சர்க்கரையையும் சேர்த்துக் குறுகக் காய்ச்சி வேரை எடுத்து விடவும். கஞ்சி போல் இருக்கும்.

அளவு : காலை, மாலை இரண்டு நேரம், மூன்று நாட்கள் சாப்பிடவும்.

தீ.நோ : பித்த கபப்பிணிகள் நீங்கும். சீரணத்தைப் பெருக்கும்.

## மருந்து – 42

தே.பொ : வீரம், இரசம், பொரிகாரம்.

செ.மு : இவை மூன்றையும் சம அளவு எடுத்துச் சுத்தித்து அரைத்து வைத்துக் கொள்ளவும்.

அளவு : 488 மி.கி. நாளொன்றுக்கு இருவேளை, மூன்று நாட்கள்.

து. ம. : பனைவெல்லத்தில் வைத்து சாப்பிடவும்.

தீ.நோ : புண், வெள்ளைக்கிரந்தி, கட்டி, சூலை, சூதக வாய்வு, விஷக்கடி.

பத்தியம் : உப்பு வறுத்துக் கூட்டவும்.

## மருந்து – 43

தே.பொ : துத்தி இலை – ஒரு பிடி, பசும்பால் – தேவையான அளவு

செ.மு : துத்தி இலையைச் சுத்தமான நீரில் போட்டு ஒரு இரவு ஊற வைத்து, காலையில் பிசைந்து இறுத்துக் கொள்ளவும். அத்துடன் பசும்பால் சமபாகம் விட்டு குலுக்கி வைக்கவும்.

அளவு : சுண்டைக்காயளவு, ஐந்து அல்லது ஏழு நாட்கள்.

து. ம. : சர்க்கரை

தீ.நோ : இரத்த மூலம்.

## மருந்து – 44

தே.பொ : தேன் – 175 கி, மிளகுத்தூள் – 12 கி

செ.மு : தேனைக் காய்ச்சி அத்தேன் சூடாயிருக்கும் போது மிளகுத்தூள் போட்டுக் கலக்கி வைக்கவும்.

அளவு : வேளைக்கு 12 கி

தீ.நோ : கோழை, இருமல்.

## மருந்து – 45

தே.பொ : சுக்கு, கடுக்காய், திப்பிலி, வாலுளுவை அரிசி – வகைக்குச் சமவெடை

செ.மு : இச்சரக்குகளைத் தேன்விட்டு அரைக்கவும்.

அளவு : வேளைக்கு தூதுளங்காய் அளவு சாப்பிடவும்.

தீ.நோ : உடல் வன்மைபெறும்.

குறிப்பு: *மருந்து சாப்பிடவுடன் 200 மி.லி. பால் சாப்பிடவும்.*

## மருந்து – 46

தே.பொ : புங்கம்பட்டை, எருமை மோர்.

செ.மு : புங்கம்பட்டையைத் துவைத்து எருமை மோரில் ஊற வைத்து அந்த மோரைக் குடிக்கவும்.

தீ.நோ : எலிக்கடி

## மருந்து – 47

தே.பொ : புன்முருங்கை வேர், இலைக்கள்ளி வேர், உத்தமதாளிவேர், எருக்கம் வேர், அழிஞ்சி வேர், செந்நாயுருவி வேர், காவேளை வேர், கடுகு, மிளகு – வகைக்குச் சம எடை. வெங்காயம், வசம்பு, வெள்வெங்காயம் வகைக்குச்சமவெடை.

செ.மு : மேற்கூறிய பொருட்களை அரைத்து எண்ணெயில் எரித்து வடித்துக் கொள்ளவும்.

அளவு : உள்ளுக்குக் கொடுத்து மேலுக்குப் பூசவும்.

தீ.நோ : பதினெட்டு வகை எலிக்கடி.

❖❖❖❖❖

# ஆ. வெளிமருந்து

## 1. கட்டு வகைகள்

### கட்டு – 1

தே.பொ : அயிரை மீன், அகத்தி இலை.

செ.மு : தேவையான அளவு அயிரை மீனையும், அகத்திக் கீரையையும் சேர்த்து அரைக்கவும்.

அளவு : கட்டியின் மீது கட்டவும்.

தீ.நோ : சிலந்தி (பிறப்பு உறுப்பில் ஏற்பட்ட கட்டி)

குறிப்பு: *புண்ணாகிவிட்டால் அகத்தி இலையை மட்டும் வைத்துக் கட்ட புண் ஆறும்.*

### கட்டு – 2

தே.பொ : இரசம், அரிதாரம், கௌரிபாஷாணம், மயில் துத்தம், எலிப்பாஷாணம், பால் துத்தம் – வகைக்கு – 4 கி, பெருங்காயம் – 1460 மி.கி.

செ.மு : மேற்கூறிய பொருட்களை ஊமத்தை இலைச் சாறு விட்டு அரைத்து 65 மி.கி. அளவு மாத்திரை செய்து கொள்ளவும்.

அளவு :

தீ.நோ : கண்டமாலை.

கண்டமாலையைக் கீறி, ஊமத்தன் சாற்றிலே மாத்திரையை உரைத்து மூன்று நாள் போடவும். ஆணி விழும். பிறகு தயிரை வடிகட்டிப் பிசைந்து புண் வாயிலே மூன்று நாள் கட்டவும். பிறகு தும்பை இலையைக் கருக்கி மூன்று நாள் கட்டவும். வேப்பங்கொழுந்தை நறுக்கி வைத்து மூன்று நாள் கட்டவும்.

குறிப்பு: கோடகசாலைவேர், மூலச்சரக்கு, மஞ்சள், வெள்வெங்காயம், நாயுருவிக் கொழுந்து இவற்றை அரைத்து புங்கெண்ணெயில் காய்ச்சிப் பொங்கினவுடனே இறக்கி ஆற வைத்து மேலே பூசவும். கண்டமாலை ஆறும்.

## கட்டு – 3

தே.பொ : நொச்சி இலை – தேவையான அளவு

செ.மு : நொச்சி இலையை அவித்துக் கட்டவும்.

தீ.நோ : விரை வீக்கம்.

## கட்டு – 4

தே.பொ : ஆனாயிலை, காடி.

செ.மு : மேற்கூறிய இலையைக் காடி வார்த்து அவித்துக் கட்டவும்.

தீ.நோ : விரியன் கடி, வீக்கம்.

## கட்டு – 5

தே.பொ : கொன்றை இலை, மருதோன்றி இலை, வசம்பு.

செ.மு : இவை மூன்றையும் இடித்து வறுத்துக் கட்டவும்.

தீ.நோ : வீக்கம்.

## கட்டு – 6

தே.பொ : இஞ்சி இலை, சலங்கை எனும் கிலுகிலுப்பை, கொத்தான் இலை, காடி.

செ.மு : மேற்கூறிய இலைகளை இடித்துக் காடி விட்டு வறுத்துக் கட்டவும்.

தீ.நோ : விரியன் கடி விஷம்.

❖❖❖❖❖

# 2. பற்று வகைகள்

## பற்று – 1

தே.பொ : வெடிகொள்ளு இலை, வசம்பு, வெள்வெங்காயம், மிளகு – தேவையான அளவு

செ.மு : மேலே கூறிய மருந்து சரக்குகளை அரைத்துக் கொள்ளவும்.

அளவு : கன்னத்தை வென்னீரில் கழுவி இந்த மருந்தைக் கன்னத்தில் போடவும்.

தீ.நோ : பல்வலி

குறிப்பு: *பலமுறை கன்னத்தைக் கழுவி இம்மருந்தைப் பூசிக் கொள்ளவும்.*

## பற்று – 2

தே.பொ : குன்றி மணி, வெற்றிலை, நரிக்கொடி, சிறு முடக்கத்தான்

செ.மு : மேற்கூறிய மருந்து பொருட்களை இடித்துச் சாறாக்கிக் கொள்ளவும்.

தீ.நோ : முகப்பருவுக்கு மேல் பூசவும்.

## பற்று – 3

தே.பொ : அக்கிராகாரம், மருதோன்றி விதை, அபின் – இவை சரி எடை, தேன் – தேவையான அளவு.

செ.மு : மேற்கூறிய பொருட்களைத் தேனில் அரைத்து லிங்கத்திற் தடவ நீண்டு கெட்டிப்படும்.

தீ.நோ : தாது விருத்தி.

## பற்று – 4

தே.பொ : எட்டிக்கொட்டை, அமுக்கிராக்கிழங்கு, வசம்பு – இவை வகைக்குச் சரி எடை, பசும்பால் – வேண்டிய அளவு.

செ.மு : மேற்கூறியவற்றைப் பசும்பால் விட்டு அரைத்து, லிங்க நரம்பு மீது தேய்த்து விடவும்.

அளவு : ஒரு வாரம் தேய்க்கவும்.

தீ.நோ : இந்திரியங் கட்டும், தாது விருத்தி உண்டாகும்.

## பற்று – 5

தே.பொ : கோழி முட்டையின் வெள்ளைக்கரு, தேன், இஞ்சிச்சாறு,
பசுநெய், வெள்ளை வெங்காயம் – இவை வகைக்குச் சம எடை, இலவங்கப்பட்டை – 2 கி

செ.மு : மேற்கூறிய ஐந்தையும் கூட்டி மத்தித்துக் கொள்ளவும். பின்னர் இலவங்கப்பட்டையும் சேர்த்தரைத்துப் பூசிக் கொள்ளவும்.

அளவு : ஏழு நாட்கள் பூசவும்.

தீ.நோ : இந்திரியங் கட்டும், தாது விருத்தி அடையும்.

## பற்று – 6

தே.பொ : நல்லெண்ணெய் – 35 கி, குங்குமப்பூ . 875 கி.கி.

செ.மு : நல்லெண்ணெயில் குங்குமப்பூவைக் கூட்டி இழைத்து லிங்கத்துக்கு மேல் பூசவும்.

தீ.நோ : இலிங்க நரம்பின் பலமின்மை.

## பற்று – 7

தே.பொ : சங்கம் பழம் – 15, பச்சைக் கற்பூரம் – 488 மி.கி

செ.மு : சங்கம் பழத்தைப் பிழிந்து மெல்லிய சீலையில்

வடிகட்டி, அச்சாற்றில் பச்சைக் கற்பூரம் சேர்த்து இழைத்து லிங்க நரம்பு மீதில் பூசவும்.

தீ.நோ : இலிங்க நரம்பின் பலமின்மை.

### பற்று – 8

தே.பொ : வறட்பூலா, நல்லெண்ணெய்

செ.மு : வறட்பூலா இலையை அரைத்து நல்லெண்ணெயில் கலந்து வைத்துக் கொள்ள வேண்டும்.

அளவு : அக்கி கண்டவிடமெல்லாம் மேல் பூசவும்.

தீ.நோ : அக்கி.

### பற்று – 9

தே.பொ : கொட்டிக் கிழங்கு

செ.மு : கொட்டிக்கிழங்கின் மேலே உள்ள முடியை நீக்கி மைபோல் அரைக்கவும். அதனுடன் சுண்ணாம்பைச் சேர்த்து மத்திக்கவும்.

அளவு : மாலை வேளையில் தொப்புளில் தடவவும்.

தீ.நோ : ருதுவாகாத பெண்கள் ருதுவாவார்கள்.

❖❖❖❖❖

# 3. பூச்சு வகைகள்

### பூச்சு – 1

தே.பொ : காயாவேர், சிறுசின்னி, காட்டுக்குறிஞ்சா இலை, அவுரியிலை, சிறுமுடக்கொத்தான், பெருமுடக் கொத்தான், குன்றிமணிவேர், அப்பைக்கிழங்கு, வசம்பு, வெள்ளை வெங்காயம், செண்பகப்பூ, செவ்வள்ளிக்கொடி, பூதகரப்பான்பட்டை, வலம்புரிக்காய் – தேவையான அளவு

செ.மு : மேற்கூறிய சரக்குகளை இடித்து நல்லெண்ணெய், வேப்பெண்ணெய், விளக்கெண்ணெய் இவற்றில் போட்டுக் காய்ச்சிக் கொள்ளவும்.

தீ.நோ : பருவிற்கு மேல் பூசவும்.

## பூச்சு – 2

தே.பொ : துருசு,
தேங்காயெண்ணெய்

செ.மு : துருசைப் பொடி செய்து தேங்காயெண்ணெய் விட்டு அரைத்துக் கொள்ளவும்.

அளவு : புண்ணின் தன்மைக்கு ஏற்ப புண் ஆறும் வரை இவ்வரைப்புத் தைலத்தைத் தடவவும்.

தீ.நோ : இரணங்கள்.

## பூச்சு – 3

தே.பொ : கரு ஊமத்தங்காய், கெந்தகம் – வகைக்கு 35 கி, நெய் – வேண்டிய அளவு.

செ.மு : மேற்கூறிய இரண்டையும் நெய்யிலரைத்துச் சீலையிலூட்டித் திரி கொளுத்தி கீழ்ச்சட்டியில் பிடிக்கத் தைலம் விழும்.

அளவு : மேல் பூச்சு பூசவும்.

தீ.நோ : சிரங்கு, பல் வலி, இடுப்பு வலி.

## பூச்சு – 4

தே.பொ : நேர்வாளம், இருவி, திப்பிலி, நெல்லிக்காய்க் கெந்தகம் – வகைக்குச் சம எடை. கையாந்தகரைச் சாறு – வேண்டிய அளவு.

செ.மு : மேற்கூறிய பொருட்களைக் கையாந்தகரைச் சாறு விட்டு அரைத்து துவரை அளவிற்கு மாத்திரை செய்து கொள்ளவும்.

அளவு : இம் மாத்திரையை எலுமிச்சம் பழச்சாற்றில் அல்லது ஊமத்தை இலைச்சாற்றில் உரைத்து மூன்று நாள் மேலே பூசவும்.

தீ.நோ : அரையாப்பு, சகல வீக்கம்.

## பூச்சு – 5

தே.பொ : அம்மான்பச்சரிசி, தவிடு.

செ.மு : அம்மான்பச்சரிசி, தவிடு இவ்விரண்டையும் நீரிலரைத்துக் கொள்ள வேண்டும்.

அளவு : மேல் பூசவும்.

தீ.நோ : அக்கி.

## பூச்சு – 6

தே.பொ : வறட்பூலா இலை, நல்லெண்ணெய் – வேண்டிய அளவு, களிப்பாக்கு – இரண்டு,

செ.மு : வறட்பூலா இலையுடன் களிப்பாக்கு சேர்த்து அரைத்து நல்லெண்ணெயில் கொதிக்க வைத்து இறக்கிக் கொள்ள வேண்டும்.

அளவு : மேலே பூசவும்.

தீ.நோ : அக்கி.

## பூச்சு – 7

தே.பொ : வெள்ளெருக்கம் சாறு, வேளைச்சாறு, குப்பைமேனிச் சாறு, தேங்காய்ப் பால், வேப்பெண்ணெய் – தேவையான அளவு, உள்ளி – 175 கி, அபின், கருஞ்சீரகம் – வகைக்கு 4 கி.

செ.மு : மேற்கூறிய சாறுகளுடன் உள்ளியை அரைத்துக் கொள்ளவும். இறக்கும் போது இவற்றுடன் அரைத்த அபின், கருஞ்சீரகத்தைக் கூட்டிப் பதமாக வடித்துக் கொள்ள வேண்டும்.

அளவு : நோயின் தன்மைக்கேற்ப வெளிப்பூச்சு பூசவும்.

தீ.நோ : வாதம்.

## பூச்சு – 8

தே.பொ : வேப்பெண்ணெய் – 1.3 லி, செங்கொடிவேலி – 17.5 கி, உள்ளி, வசம்பு.

செ.மு : மேற்கூறிய சரக்குகளை ஒன்றாகக் கூட்டித் திரளக் காய்ச்சி வடித்துக் கொள்ளவும்.

அளவு : மேல் பூச்சு.

தீ.நோ : முடங்கல் வாதம்.

## பூச்சு – 9

தே.பொ : முதியார் கூந்தல் – 3500 கி, தண்ணீர் – 43 லி, சுக்கு – 175 கி, அரத்தை, சித்தரத்தை, கொடிவேலி வேர், அதிமதுரம், இந்துப்பு, சவர்க்காரம் – வகைக்குச் சம எடை, துவட்சிகை கடுக்காய் எண்ணெய் – 1.3 லி, பன்னீர், தயிர் – தேவையான அளவு.

செ.மு : முதியார் கூந்தலைத் தண்ணீர், தயிர், பன்னீர் விட்டு அரைத்துக் கரைத்துக் கொள்ளவும். பிறகு சுக்கு முதல் சவக்காரம் வரை உள்ள மருந்துகளைச் சேர்த்துக் கொள்ளவும். எண்ணெயையும் சேர்த்துக் காய்ச்சிப் பதத்தில் வடித்துக் கொள்ளவும்.

அளவு : எண்ணெயை மேலுக்குப் பூசவும்.

தீ.நோ : சகல வாதம்.

❖❖❖❖❖

## 4. கலிக்கம்:—

தே.பொ : முருங்கைப்பூச்சாறு, தாளிப்பூச்சாறு, குதிரைக் குளம்புச்சாறு

செ.மு : மேற்கூறிய சாறுகளைக் கலந்து கண்ணில் இடவும்.

தீ.நோ : கண் பூ.

## 5. களிம்பு:—

தே.பொ : சுத்தி செய்த கெந்தகம், இரசம், நீரடிமுத்து – வகைக்கு 50 கி, ஊமத்தங்காய் – 1, எருமை வெண்ணெய் – வேண்டிய அளவு

செ.மு : ஊமத்தங்காயைக் கீறி இவை மூன்றையும் அதனுள்ளே வைத்து ஆறு எருவில் புடம் போடவும். பின்பு அந்தக் காயை எடுத்து அதனுடன் எருமை வெண்ணை சேர்த்து அரைக்கவும்.

அளவு : காலையில் பழையது சாப்பிட்ட பிறகு உடம்பில் பூசி மூன்று மணி நேரம் கழித்துக் குளிக்கவும். எள் புண்ணாக்கைச் சுட்டு அரைத்து உடம்பில் தேய்த்துக் குளிக்கவும்.

தீ. நோ. : சொறி, சிரங்கு.

❖❖❖❖❖

